புது வாழ்வு

ஓ. எம். சுப்பிரமணி

விரைவில் வெளிவருகிறது!

அரச குமாரியின் அழகு கவிஞனைக் காதலனக்கிற்று.

இன்பக் காதலுக்கு எதிரே அரசன் ஆணை நிற்கிறது.

வெற்றி காதலுக்கே!!

★ பில்ஹணா ★

(முபாரக் பிக்சர்சாரின் முன்னணிப் படம்)

★

கே. ஆர். ராமசாமி,

எ. ஆர். சகுந்தலா,

ஆர். பாலசரஸ்வதி, எஸ். எஸ். ஷேக்கப்பா

எம். ஜெயஸ்ரீ, புளிமூட்டை, அங்கமுத்து

மற்றும் பலர் நடித்த

கவிதா மண்டலக்

காதல் ஓவியம்

விவரங்களுக்கு :—

எம். பி. எம். எஸ். கிஸ்ஸார் & கம்பெனி

லாங்கஸ் கார்டன் ரோடு,

புதுப்பேட், சென்னை.

புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 தை 1. | மலர் 1

ஆசிரியர் :—க. அன்பழகன் எம். ஏ.,

துணை ஆசிரியர்:—கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

கவிஞர் வாழ்த்து	...	3
புத்தாண்டும் புதுவாழ்வும்	...	4
மேடைப் பேச்சு—இன்று	...	9
கலைமகள்	...	13
புத்தம் புதுவாழ்வு	...	15
அறிவியல் தந்தை ரோஜர் பேக்கன்		17
வலை கண்ட மான்	...	23
பொங்கும் புதுவாழ்வு	...	26
பொங்கல் விழா	...	27
ஒலிக்கும் சிலம்பு	...	29
புது வெள்ளம்	...	33
உலகச் சூழல்	...	38

பொங்கல் மலர்

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை 7.

ஜனவரி
1948

விலை அணா 4

எனெஸ்கே பிலிம்ஸ் &
உமா பிக்சர்ஸ்
தயாரிப்பு.
சிந்தனையூட்டும் சிறந்த கதை!
நாட்டுக்கேற்ற நல்லகதை!!
N.S. கிருஷ்ணன்
T.A. மதுரம் ★★
பானுமதி ★★
நல்லதம்பி
கதை வசனம்:
அறிஞர் அண்ணாதுரை, M.A.
டைரக்ஷன்:
கிருஷ்ணன், பஞ்சு.
ஸ்டுடியோ:
நியூடோன்.
S.P. Arts
விபரங்களுக்கு: எனெஸ்கே பிலிம்ஸ்
6 வெங்கடராமையா தெரு தி. நகர் மதராஸ்.

வாழ்க நம் கவிஞர்!
க. அன்பழகன்
28/11/58

கவிஞர் வாழ்த்து

புதுவாழ்வு வந்ததுகாண் பொங்கல் நாளில்!
புன்வாழ்வு தீர்ந்ததுகாண் திராவி டத்தில்!
எதுவாழ்வு? மேற்கொள்ளும் நெறிதான் என்ன?
என்பவற்றை அழகாக விளக்க மாக
இதுநாளில் எழுதவந்த அறிஞன் தன்னை
என் நாவால் மனமார வாழ்த்து கின்றேன்.
புதுவாழ்வு திராவிடர்கள் கைகள் தோறும்
பொலிக; அது என்றென்றும் வாழ்க நன்றே!

திராவிடரின் நன்மைக்கே உழைப்போன்; எந்தத்
தீமைக்கும் உளம் அசையான்; அறிவு மிக்கான்;
ஒருவ(ன்)னால், தைப்பொங்கல் பொங்கும் நாளில்
ஊரெல்லாம் மகிழ்ச்சிவிழா எடுக்கும் நாளில்
வருகின்ற புதுவாழ்வை நாட்டார் எல்லாம்
வருகஎன வரவேற்க! ஆதரிக்க!
திருஎய்த, அறம்ஓங்க, உரிமை எய்தித்
திராவிடர்கள் பல்லாண்டு வாழ்க நன்றே!!

புத்தாண்டும் புதுவாழ்வும்

பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்! என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது இன்று. தமிழரின் புத்தாண்டும் பிறந்து விட்டது. இன்று முதல் தமிழரின் வாழ்விலே ஓர் புதுமை காணப்படும். அந்தப் புதுமை தோன்றுவதைக் காட்டும் குறியாகக் கொண்ட விழாவே பொங்கல். அந்தப் புதுமை செயற்கையல்ல இயற்கை, கற்பனையல்ல உண்மை. ஆண்டு தோறும் நிகழ்வது மாகும்.

காலச்சகடு விரைந்து சுழலுகிறது. பருவங்கள் மாறி மாறி உருளுகின்றன. ஆண்டுகள் கழிகின்றன. ஒவ்வொரு புத்தாண்டும் பிறக்கும்போதே, வேறோர் ஆண்டு அத்தோடு முடிவடைகின்றது. அதைப் போன்றே ஒவ்வொரு புதிய பொங்கலும் அதற்கு முன் பொங்கலைப் பழையதாக்குகின்றது, கழிந்ததாக்குகின்றது.

பழம் பொங்கலின் இறுதி நாள் தான் போகிப் பொங்கல். எனவே பொங்கல் ஓர் ஆண்டின் எல்லையையும் குறிக்கின்றது. ஞாயிறு தென்றிசை நோக்கி நகர்ந்தது மறுபடியும் வடதிசை நோக்கித் திரும்புகிறது. ஒளியும் வெப்பமும் மழையும் கிடைக்க அது காரணமாகிறது. ஞாயிறு தென்றிசை நோக்கிச் சாய்ந்தது அப்படியே சாய்ந்துவிடாமல் மறுபடியும் திரும்புவது, ஞாயிறு பொங்கல், பொங்கி எழுதல் எனக் கருதலாம். எனவே- போகிப் பொங்கல், கதிரவன் தென்றிசை போகிய பொங்கல் எனவும், ஓர் ஆண்டு போகிய பொங்கல் எனவும், மார்கழி போகிய பொங்கல் எனவும், முதல் பொங்கலின் போது சமைத்து உண்ட, அரிசி முதலிய உணவுப் பொருள்கள் போகிய (செலவாகிவிட்ட) பொங்கல் எனவும், கருத இடம் தருகின்றது.

மற்றும் போகிப் பொங்கலன்று பழைய பொருள்களை எல்லாம் போக்கி விட்டுப் பொங்கலன்று-எல்லாம் புதுப் பொருள்களாகவே கொள்ளும் வழக்கை நோக்கின், 'போக்கும் பொங்கல்' என்பதே போகிப் பொங்கல் என வந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பொங்கல் முதல் நாளோடு பழைய ஆண்டு கழிந்து பொங்கலன்றே - நமக்குப் புத்தாண்டு பிறக்கின்றது.

பொங்கலின் போதுதான்- விளைந்து, முற்றிச் சாய்ந்திருக்கும் பயிரை அறுவடை செய்கின்றோம். அதுவரையில் உழைத்து கண்காணித்து வளர்த்த பயிரைத்தான், அன்று அறுத்துக் கொண்டுவருகிறோம். ஏற்கனவே-வளர்ந்ததை நம்மாலேயே வளர்க்கப்பட்டதை, அவசியமானதால் நாமே அழித்துத்தான், ஆக்கம் பெறுகின்றோம்.

புதுப்பொங்கல், பழம் பொங்கலை விலக்குகின்றது. அறுவடை அதுவரை வளர்த்த பயிரை அழிப்பதாகின்றது. ஆனாலும் இவற்றால் தான் சமுதாயம் வாழ்கிறது.

பொங்கலுக்கு முன் இருந்த வாழ்வு ஒரு முடிவுக்கு வந்து பொங்கலுடன் புது வாழ்வும் மலர்கிறது. அந்தப் புதுவாழ்வுங் கூட, அழிக்க வேண்டியவற்றை அழித்து ஆக்க வேண்டியவற்றை ஆக்கிய தன் விளைவேயாகும்.

இன்றே பொங்கல் பூத்து விட்டது. புத்தாண்டும் பிறந்து விட்டது. புதுவாழ்வும் மலர்ந்து விட்டது. ஆனால் இந்தப் புது வாழ்வு மறுபடியும் பழைய வாழ்வாகவே ஆகிவிடுகிறது.

இன்று நாடு வெள்ளையர் ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்று விட்டது என்றாலும், வடநாட்டார் ஆதிக்கத்தில் சிக்கிவிட்டது.

எனவே வெள்ளையர் ஒழிந்த பின் தோன்றும் இந்த முதல் பொங்கல் ஓரளவு மகிழ்ச்சியளிக்கிறது என்றாலும்-நமது பணி முடிந்துவிட்டதைக்காட்டுவதல்ல. இனி தான் நமது பணி வளர வேண்டும். பயனளிக்க வேண்டும்.

இந்தப் பொங்கலன்று, தமிழ்த்திருநாள், கொண்டாட்டத்தின் போது-நாம் நம் நாட்டை வடநாட்டார் ஆதிக்கத்தினின்றும் விடுவிக்க உறுதி கொள்ள வேண்டும். அவ்வுறுதி வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும்.

நாட்டிலே குந்தக் குடிசையற்றோர், படுக்கப் பாயற்றோர், கட்டத்துணிபற்றோர், பிய்ந்த கூரையை வேய கீத்தற்றோர் என்ற நிலையினர் பலப்பலர். நாகரிக மிகுந்த நகரமென்றாலோ, அங்கேதான் சாக்கடை ஓரத்திலேயே வாழ்க்கை நடத்தும் ஏழைகள் ஆயிரக் கணக்கிலே உள்ளனர். கிராமமெனிலோ, உழவுத் தொழிலை நடத்தும் ஏழை மக்கள்— ஒப்பற்ற உழைப்பாளர்கள் மேலே காட்டிய இழிநிலைக்கு ஆளாயுள்ளனர். இந்த நிலையிலே அவர்கள் 'பொங்கல்' கண்டு பூரிப்பதுதான் எங்கனம்?

பொங்கலோ, உழவர் திருநாள். உழவர்களேதான் பொங்

கல் விழாவைக் கண்டவர்கள். இன்றோ, உழவருக்கில்லை பொங்கல்.

உழைப்பதற்கு மட்டுமே உழவன். உழைப்பின் பயனைக் கொள்ள நிலத்துக்காரன். நெல் மணிகளைக் குவித்துத் தருவது உழவன், அவைகளைத் தனது களஞ்சியத்திலே கொட்டிக் கொள்ள மிராசுதார், மிட்டா தார், ஜமீன்தார் எனப்பலர்.

உழவே உலகத்திற் காணி என்றார் வள்ளுவர். உழவில்லையேல் மக்கள் உயிர் வாழ்வதே கூட இயலாது. ஆனால், அத்தகைய உழவுத்தொழிலிலே ஈடு பட்டுள்ளவர்கள்தான், இன்று உண்ணும் உணவுக்கும் ஊரார் கையை எதிர்பார்க்கின்றவர்களாளுர்கள். உழவோ, உலகத்திற்கு அச்சாணி, ஆனால், உழவருக்கு வாழ்க்கையில் முன்னேற வியலாமல், பிணைத்திருக்கும் விலங்காணி. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு கொழுத்திருப்போரை நிந்தனை செய்வோம் என்பது பாட்டு. வாழ்வோ, உண்டு கொழுத்திருப்போரை, உழவரும் உழைப்பாளருமே வந்தனை செய்யவும், அதிலே தவறு காணப்பட்டால் உண்டு கொழுத்திருப்போர் உழவரை நிந்தனைசெய்யவும், துயரத்திற்கு ஆளாக்கவுமாகி விட்டது. மிராசும் மிட்டாவும் இட்டதே சட்டமாகவும், பண்ணையாளுக்கும் பஞ்சைக்கும் பணிந்து வாழ்வதே முறையாகவும் ஆகிவிட்டது. உழைப்புக்கு மதிப்பற்ற இந்நிலையில், உழவர் துன்பம் எல்லை மீறிவிட்ட இந்நிலையில், அவர்களுக்குப் பொங்கலால் விளையும் மகிழ்ச்சி ஏது ?

எனினும், இவ்வாண்டில் ஜமீந்தார், இனம்தார் என்ற இருதிறத்தாரும் விலக்கப்பட இருக்கின்றனர் என்பது அக்கிராமங்களிலே உள்ள ஏழை உழவருக்குச் சிறிது ஆறுதல் அளிப்பதாகும். ஆனால் இது வரை ஏழை உழைப்பாளரை உறிஞ்சிக் கொழுத்து ஏகபோக வாழ்வு நடத்திய ஜமீன்தார்கட்கும், இனம்தார்கட்கும் நஷ்ட ஈடு என்ற பெயரால் ஒரு பெருந்தொகையைக் கொடுக்கப் போகின்றனர் என்பதை எண்ணி மக்கள் தங்கள் பொதுப் பணத்தை இப்படி பாழுக்கு வீசுகிறார்களே என்று வருந்தத்தான் செய்வர். இந்த நிலையிலே பொங்கல் கலப்பற்ற மகிழ்ச்சி விளைவிப்பதெங்கே ?

மேலும்,நம்நாட்டு மக்கள் பழமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். பொங்கல் வருந்தோறும் புத்தாடை உடுத்து புதிய உணவு கொள்ளுகின்றனரேயன்றிப் புதுக்கருத்துக்களைக்கைக்கொள்வதில்லை. முன்னேற்றத்திற்கான புதுவழியையும் தேடுவதில்லை.

பலஆயிரம் ஆண்டுகளாக, வழங்கி வரும் கலப்பையிலோ, ஏரிலோ இன்றும் மாற்றம் காண

வில்லை, ஒரு சிறிதும் முன்னேற வில்லை. கட்டை வண்டிக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட கலப்பையேதான் ரயிலேறிப் பயணம் போவது, எவருக்கும் வழக்கமாகிவிட்ட இந்தக்காலத்திலும், பயன் படுத்தப்படுகிறது.

மற்ற நாடுகளிலெல்லாம் அறிவியல் ஆராய்ச்சியின் பலனைப் பயிர்த் தொழிலில், பல வகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. உழவுக்கு ஒரு இயந்திரம், அறுவடைக்கு மற்றொன்று, விதைக்க விமானம், மேகத்தைக் குளிரச் செய்து மழை பெய்ய வைக்க ஒரு முறை, மழை அதிகமானால் கார்முகிலைக் கலைக்க ஒரு வழி, இவ்வளவும் கண்டு பிடிக்கப் பட்டு நடைமுறையில் கொண்டு வரப்பட்டுள்ளன மேல் நாட்டில்.

இங்கேயோ, இடி ஒலி கேட்டால், அர்ச்சுனா! அர்ச்சுனா என்று அழைப்பதும், மழை பெய்யா விடில் கொடும் பாவி கட்டி இழுப்பதும், நாட்டிலே விளைவு ஏற்பட என்று யாகஞ் செய்வதும், விதைக்க நாள் பார்க்க ஐயரை அழைப்பதும், அறுவடைக்கு முன் சகுனம் பார்ப்பதும் நடை பெற்று வருகின்றன. இவ்வளவும் நடை பெற்றும் விளையாவிட்டால் ஆற்றுக் கால்வாய்களை அதிகப் படுத்துவது குறித்தோ, அரசியல் வரியைக் குறைப்பது, தவிர்ப்பது குறித்தோகூடச் சிந்திக்காமல், 'அவன் விட்ட வழி' என்று தலையிலே கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுகின்றனர் மக்கள். இந்த மனப்பான்மை ஒழியா முன்னம் இந்நிலை மாறுவதெங்கனம்? பொங்கல் சிறப்படைவது தான் எவ்வாறு?

மதமாறுபாட்டால், பகை வளர்ந்து அறிவு தேய்ந்து, சாதிப் பற்றினால், பேதம் வளர்ந்து, பெருநோக்கம் சிதைந்து, புராணப் பெருக்கால் புல்லறிவு வளர்ந்து பகுத்தறிவு, மாய்ந்து, வாழ்விழந்து வகை கெட்டு நிலைகுலைந்துள்ளனர் நம் நாட்டவர்கள். அவர்களுடைய உள்ளத்திலே மாற்றம் ஏற்பட்டாலொழிய வாழ்விலே மாற்றம் இல்லை. புத்துணர்வு பிறக்கவும் வழியில்லை.

தேங்கிய பாசிபிடித்த-குளத்துத் தண்ணீர் போன்றதாகி விட்டது நமது நாட்டவரின் உள்ளக்கருத்து. அந்தக் குளத்து நீரை இறைத்தாலொழிய-புது நீர் பாய்ந்தாலும் அதுவும் சேர்ந்து கெடுமேயன்றி தண்ணீர் தூயதாகாது. அதைப் போலத்தான் பழைய கருத்துக்களைப் போக்கி, மூட நம்பிக்கைகளை மாய்த்து, அறிவொளி பரவச் செய்து, அதன் பின் அந்த உள்ளத்திலே புதுக்கருத்துக்கள் பரவுமானால் அவை நிலைக்கும், பயனுமளிக்கும்.

இல்லையாயின் எருமை மீது ஏறிவரும் எமனும் வீட்டின் மேல் தளத்திலே வந்திறங்கக் கூடிய விமானமும்; கிரகணம் இராகு கேது பிடிப்பதால் ஏற்

படுவது என்று புராணீகர் கூறும் காரணமும், அறிவியல் கூறும் விளக்கமும், இரண்டும் சரியாகத் தான்தோன்றும், தெளிவு ஏற்படாது.

இதற்கு மக்களிடத்திலே விழிப்பும், ஆளவந்தார்களிடத்திலே மக்களின் வருங்கால வாழ்வைப்பற்றிய பொறுப்புணர்ச்சியும் தேவைப்படுகின்றன.

மேலும், எழுச்சி பெற்றுள்ள இளைஞர் உலகைச் சுயமரியாதை கொண்டு, தலைநிமிரச் செய்வதும், சிந்திக்கச் செய்வதும், சிந்தித்த முடிவின்படி நடக்கச் செய்வதும், பாட்டாளிகளின் உயர்வுக்கும் திராவிட இனத்தவரின் உரிமைக்கும் தாயகத்தின் விடுதலைக்கும் பாடுபட உறுதி கொள்ளச் செய்வதும் இன்றியமையாததாகின்றன.

அதனினும் பாமரர்களைத் தட்டி எழுப்புவதுதான் கடினம். அவர்களை எழுப்பி விட்டால் அதன்பின் நடவாதது ஒன்றில்லை. அத்தகைய அரும் பணியைச் செய்து வருகிறார் நமது தலைவர் பெரியார் அவர்கள்.

அத்தகைய பாமரர்கள் விழிப்புற்றபின்னும் மேலும் மேலும் ஊக்கி அவர்களைப் புதுப்பாதையில் நடக்கச் செய்கிறார் நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

இளைஞர்கள்-தமது அளவு கடந்த உணர்ச்சியால் ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளாமல், அவசியம் ஏற்படுகின்ற பொழுதெல்லாம், அநீதியை வீழ்த்த பகையைப் போக்க ஒன்றுதிரளச் செய்வது முக்கியமாகும். அத்தகைய முறையிலே-இளைஞர்களைத் தேவைப்படும் சமயத்தில் திரண்டு எழச் செய்யும் அரும் பணியைச் செய்துவருகிறார், நமது அறிஞர் அண்ணாதுரை அவர்கள்.

புரட்சிப் பண்பாடுகின்றனர் இளைஞர். இனி மக்கள் மனத்திலே மாற்றந்தோன்றுவதும் வாழ்க்கையிலே புரட்சி ஏற்படுவதும் உறுதியாகும். அதன் விளைவாகத் தான் புது வாழ்வு பூக்கும்.

புத்தாண்டு பிறப்பது இயற்கை. புதுவாழ்வு பிறப்பது, நமது முயற்சியின் விளைவு. புத்தாண்டு பிறந்தது, பொங்கலும் வந்தது என்ற அளவோடு திருப்தியடைந்து விட்டால்-புது வாழ்வு பிறப்பது அரிதாகி விடும்.

புதுவாழ்வு பெற்று விட்டால் அதன்பின் பொங்கல் உணவுப் பொங்கலாகமட்டுமின்றி உணர்வுப் பொங்கலாக, உவகைப் பொங்கலாகத் திகழும்.

அரும்பிய தன்னுணர்வு, அழகான புரட்சி இதழ்களாக மலர்ந்து, மக்கள் வாழ்வினிலே புதுவாழ்வு மணம் பரப்பட்டும்!
உவகை பொங்கட்டும்!
வாழ்க பொங்கல்!

வெல்க புரட்சி!!

ஒ. எம். சுப்பிரமணியன்

மேடைப் பேச்சு - இன்று

அறிஞர் அண்ணாதுரை

[31-12-47 அன்று சென்னை ஒலிபரப்பு நிலையத்திலிருந்து அறிஞர் சி. என். அண்ணாத்துரை 'மேடை பேச்சு, 'உன்னாலும் ஆகும்' என்பது பற்றிப் பேசினார்.

மேடைப் பேச்சில் வெற்றி பெறும் வகை, பேச்சு அமையவேண்டிய முறை ஆகியவை பற்றி அன்று கூறினார்.

இந்தக் கட்டுரையில் மேடைப் பேச்சு, இன்று மக்களாட்சிக் காலத்தில் எவ்வளவு அவசியமாகிறது என்பதை விளக்கியுள்ளார்.

மேடைப் பேச்சு, முரசுமாகிறது, ஆராய்ச்சி மணியுமாகிறது என்பது இக்கட்டுரையின் கருத்து.]



★ ★ ★

சில நாட்களுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகச் செனட் சபையில், மேடைப் பேச்சு ஒரு பயிற்சிப் பாடமாக்கப்படவேண்டும் என்று ஒருவர் தீர்மானம் கொண்டு வந்தார். வேறொருவர் 'இது அவசியமில்லை; இப்போது பேசுவதைக் குறைக்கச் சொல்ல வேண்டுமே தவிர பேசக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை,' என்று பேசினார். பிறகு அதை ஒட்டியும் வெட்டியும்பலர் பேசினர். இறுதியில் தீர்மானம் தோற்றது.

ஆனால், பலர் அதுபற்றிப் பேசினார் அழகாக, விரிவாக, விளக்கமாக. ஆக மேடைப் பேச்சு வேறொரு வெற்றி பெற்றது என்று கூறலாம்.

மேடைப் பேச்சை ஆபத்தானது என்றுகருதுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் அச்சம் காரணமற்றதல்ல. கட்டு. திட்டம், சட்டம், தடை முதலியன இல்லாமலிருந்தால் மேடைப் பேச்சுகளால் ஒருதிங்களில் நாட்டையே இரத்தக்காடாகும்படி செய்துவிட முடியும்! பேச்சுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. ஆக்கும் சக்தி, அழிக்கும் சக்திஆகிய இரண்டும் அதற்கு உண்டு. மேடைப் பேச்சைக் கண்டு அஞ்

சுபவர்கள் அதன் ஆக்கும் சக்தியை மறந்து விடுகிறார்கள். மேடைப் பேச்சினால் கேடும் விளையும் என்பதற்குப் பயந்து, மேடைப் பேச்சை வெறுத்துத் தள்ளினால், நாட்டிலே அமைதி இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அது நாஜி அமைதியாகத் தான் இருக்க முடியும்.

மேடைப் பேச்சு ஒழுங்குக்கு உட்பட வேண்டும் என்று வலியுறுத்துவது விவேகமாகும். ஆனால் ஊமைப் போக்கே ஊர் சீர்படும் முறை என்று எண்ணுவது தவறு—மிகமிகத் தவறு.

மன்னராட்சிக் காலத்திலே, மக்களிடையே சட்ட திட்டங்கள்பற்றி விளக்கம் உரைக்கும் பேச்சு, வரி முறை பற்றிய பேச்சு, இவை தேவைப்படாமலிருந்தன. மக்கள் மனத்திலே குறை இருப்பினும் கூட மன்றமேறிப் பிரச்னைகளைப் பேசும் வழக்கமில்லை. அரசன் தன் அமைச்சரிடமும், அமைச்சரையொத்த ஆன்றோர் சான்றோரிடமும் கலந்து பேசுவதுண்டு. ஆனால், மக்கள் மன்றம் கிடையாது. மனக் குறையுடையோரில் கண்ணியர்கள் மெல்லிய குரலிலும், மற்றையோர் உரத்த குரலிலும், அரசன் அறியா இடத்தில், சாவடியில், சாலையில், கிணற்றருகே, கோயிலிலே கூடிப் பேசிக் கொள்வர். அரசனின் ஆட்கள் வருகிற அரவம் கேட்குமட்டும்.

அந்த நாட்களிலே மேடைப் பேச்சுக்கு அவசியமில்லை.

அமைந்திருந்த மேடைகளிலே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பற்றியோ, கலம்பகத்துக்கும் அகவலுக்கும் உள்ள பேதாபேதம் பற்றியோ பேச்சு நடைபெற்றனவேயன்றி, விற்பனை வரியின் விளைவுகள், விதவை மறுமணச் சட்டத்தின் அவசியம், விஞ்ஞானக் கல்லூரிக்கு மானியம் போன்றவைகளைப்பற்றிய பிரச்னைகள் பேச வேண்டிய நிலையில்லை.

மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். மக்கள், ஆட்சிப்பொறுப்பிலே பங்கு கொள்ள வில்லை.

இப்போது, எல்லோரும் இந் நாட்டு மன்னர். அரசர்கள் சில பலர் இருக்கின்றனர் எனினும் அவர்களும் பழைய நாட்களிலே யிருந்த ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்டர்கள் அல்ல. அமைச்சர்கள் ஒரு புறம்; அவர்களை ஆய்ந்தெடுக்கும் அற மன்றம் மற்றோர்புறம்; அந்த மன்றத்துக்குத் தக்கோரைத் தேர்ந்தெடுத்தனுப்பும் மக்கள் வேறோர் புறம்; இதற்கிடையே மன்னர். மன்னர்களின் சிங்காதனத்தைச் சுற்றிலும் சேல்விழி மாதர் வெண்சாமரம் வீசிக் கொண்டிருக்க, அரண்மனை ஆஸ்தான கவி விருது பாட, ஆலயக் குரு ஆசி கூற அரசோச்சும் நாளல்ல இது.

அமைச்சர்கள் வரவு செலவு திட்டத்தை விளக்கிக் கூற, அதற்கேன் இவ்வளவுதொகை? இதையேன் கவனிக்கவில்லை? என்று கேள்விகளைச் சட்டமன்றத்தினர் கேட்க, ஒவ்வொன்றையும் விரிவாகவும், விளக்கமாகவும் பேசி, சிக்குகளை அறுத்து, திட்டங்கள் தீட்டப்பட்டு மன்னர்களிடம் முத்திரை பொறித்திடுதற்கு மட்டுமே செல்லும் நாட்கள்.

மக்களாட்சியிலே இந்த உரிமைகள் உள்ளன. இவைபெறும்போது மகிழ்ச்சி தரக்கூடியன. ஆனால்

பெற்ற பிறகோ, இந்த உரிமைகள் பாரமான புதிய பொறுப்புக்களை மக்கள் மீது ஏற்றிவிடுகின்றன. கதிர் முற்றிய பயிர் சாய்ந்திருத்தல் போல, இந்தப் பொறுப்புப் பாரம், ஆட்சியாளர்களாகும் வாய்ப்புப் பெற்றவர்களை ஆக்கிவிடுகிறது. நிமிர்ந்த நடை, நெறித்த புருவம், சுட்டுவிரல் காட்டி ஆட்டி வைத்தல், இவை இனி நடவாத காரியம்.

மன்னர்கள் தேவகுமாரர்கள் என்று கருதப்பட்ட காரணத்தால் அவர்களுடைய போக்குக்கு, நெடுங் காலம் வரையிலே மக்கள் காரணம் கேட்கவில்லை. இப்போது, அண்டை வீட்டுக்காரர், பக்கத்து ஊர்க்சோழர் ஆட்சி புரியக் கிளம்புகிறார். அதிலும், "தங்கள் மேலான ஓட்டுகளை எனக்கு அளித்து என்னை ஆதரியுங்கள்; நான் உங்களுக்கு ஊழியம் புரிகின்றேன்," என்று கூறி, அனுமதி பெற்று, ஆட்சிப் பீடத்துக்குச் செல்லுங்காலம். அதிலும் அந்த ஆட்சிப் பீடமோ நிரந்தரம் அல்ல. இந்நிலையில் முன்னர் போல் இருத்தல் முடியாததாகி விடுகிறது.

நாட்டை ஆள்பவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் மக்களிடம் காரணம் கூறியாக வேண்டும். காரணம் பொருத்த மற்றது என்றால், தள்ளிவிடவும், கண்டிக்கவும் மக்களுக்கு உரிமையிருக்கிறது. உரிமை இருப்பது மட்டுமல்ல; ஊராளும் நிலைபெற்றவர்களின் திட்டங்கள் சரியல்ல என்று கூறி, 'நலன் தரும் வேறு திட்டங்கள் உள்ளன, நாடாளும் பொறுப்பு எமக்கு அளிக்கப்பட்டால் நாங்கள் அத்திட்டங்களைக் கொண்டு, மக்களுக்கு நலன் ஏற்படச் செய்வோம்' என்று கூறும் மாற்றுக் கட்சியினரும் உண்டு. அவர்கள் மக்களிடம் சென்று இதனைக் கூறுவர்.

மேடைப் பேச்சு இந்நிலையில் அவசியமாகிறது. அவசியம் என்ற சொல் போதாது. மக்களிடையே மேடைப் பேச்சு ஒரு நீக்க முடியாத அங்கமாகிவிடுகிறது. ஆள்பவர், ஆளும் வாய்ப்புப் பெற வேண்டுமென்று கோருபவர், ஆளப்படுபவர் ஆகிய யாவரும் பேசித்தீர வேண்டும். பிரச்னைகளை விளக்க, திட்டங்களை விளக்க.

ஒருவர் ஆட்சி செய்ய மற்றவர் பேசும் உரிமையின்றி இருக்கும் நிலையிலே, ஒருவர் ஆட்சி செய்வது எளிது-சுவையுமுடையது. ஆனால் இறுதியில் அதிலே போராபத்தும் உண்டு. புனல் நிறைந்த கண்களுடன் உள்ள மக்களே பிறகு திடீரென்று கனல்கக்கும் பேச்சினராகி, முடியுடை வேந்தர்களை விரட்டுவதும் உண்டு. அதிகாரத்தைக் கொண்டு அடக்கி ஆள்வது, ஆளும் நிலைபெற்றவருக்கு ஆனந்தம் தருவதற்குக் காரணம் அந்த முறையிலே உள்ள கஷ்டமற்ற தன்மை.

பலருடைய கருத்துக்களைக் கண்டறிந்து, அவைகளின் நோக்கங்களைக் கூர்ந்து கண்டறிந்து நல்லன கொண்டு அல்லன நீக்கி, தன் திட்டத்தைத் திருத்தி, யாவருக்கும் சம்மத முடையதாகச் செய்து, ஆட்சி நடத்துவது கஷ்டமான காரியம். மக்களை மதித்தல், அவர் மனதறியும் பண்பு, பொறுமை, நடு நிலைமை, ஆராய்ச்சி மனப் போக்கு, குற்றம் என்றுபடின் தள்ளி விடும் பெருங்குணம் ஆகிய இவ்வளவும், இவற்றிற்கு மேலும் அருங்குணம் பல

வேண்டும். அலுப்பு; சலிப்பு; கோபம், தற்பெருமை, மமதை இவை கூடாது; இவைகளோ, தொட்டால் ஒட்டிக் கொள்ளும் நச்சுச் சக்திகள்.

சர்வாதிகாரம் சுலபம், ஜனநாயகம் கடுமை. நடைமுறைக்கு. ஆனால் ஜனநாயகத்தின் பயன் அதிகம்; சர்வாதிகாரத்தின் பயன் குறைவு. கேடு அதிகம். மன்னராட்சிக் காலத்தில் பேரிகை, முரசு, ஆராய்ச்சி மணி என்று பல உண்டு.

மன்னர் கட்டளைகளை மக்களுக்குக் கூற முரசறைவர். மக்கள் நீதிகோர ஆராய்ச்சி மணியை அடிப்பர்.

இன்று மேடைப்பேச்சு மக்களுக்கு முரசுமாகிறது, ஆராய்ச்சி மணியுமாகிறது.

அறிஞர் அண்ணாதுரை

(ஓர் தொகுப்பு நூல்)

பெரியார், பாரதிதாசன், ச. சோ. பாரதியார், திரு. வி. க. சுத்தானந்த பாரதி, ரா. பி சேதுப் பிள்ளை, கைவல்யம், ஈ வே கி. கி. ஆ பெ விஸ்வநாதம், அப்துல் மஜீத் எம்.எல்.ஏ. புலவர் குழந்தை நாரண துரைக்கண்ணன், ஔவை. சு. துரைசாமி, ராமாமிர்தத்தம்மையார், கல்கி. ஆசிரியர் 'தமிழ் மணி', ஆசிரியர் 'தினமணி', ஆசிரியர் 'பாரததேவி', நாராயண அய்யங்கார், மு. வரதராசனார், கா. அப்பாதுரைப் பிள்ளை, எம் கே. டி. பாகவதர், கே. ஆர். ராமசாமி, என் எஸ். கிருஷ்ணன், டி. எஸ். வேலன், நெடுஞ்செழியன், அன்பழகன், திருலோக சீதாராம், இலக்ஷ்மிரதன் பாரதி, இளஞ்செழியன், சி. பி. சிற்றரசு. மற்றும் பலர்

C. N. A.வைப் பற்றி எழுதிய அழகிய நூல்

மூவர்ண அட்டை - சிறந்த காகிதம்
அண்ணாவின் பற்பல புகைப் படங்கள்

பக்கம் 120. :: விலை ரூ. 1—8—0

தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 1-10-0 M.O. செய்யவும்.

திராவிடப் பாசறை,

8-A, பைகிராப்ட் ரோட், சென்னை - 5.

கலைமகள் ★

கலைவாணர். N. S. கிருஷ்ணன்.

[கலைவாணர் நகைச்சுவைஅரசு அவர்களை அறியாதார் தமிழ் நாட்டில் இல்லையெனலாம். அவரது நகைச்சுவை, இன்று பட்டி தொட்டிகளிலெல்லாங் கூட ஒலிக்கின்றது. அவ்வளவிலும் தோன்றும் அறிவுக்கதிர் தமிழ்நாட்டின் இருள் போக்கத் துணையாகிறது.

அண்மையில் அவர் சிறைச்சாலையில் கிடந்து வாடவும் மக்களோ வெளியிலே இருந்தும் வருந்தவும் நேரிட்டதும் - உண்மையை நிலைநாட்டிச் சிறைக்கதவைத் திறக்கச் செய்து சிரித்த முகத்துடன் வெளி வந்ததும் அவர் அருகே பாகவதர் புன்னகை பூக்க விளங்கியதும், மக்கள் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்ததும், மறக்கமுடியாத காட்சிகளாகும்.

தமிழரின் மறுமலர்ச்சிக்கு இதுகாறும், பெரியார், அறிஞர், கவிஞர் ஆகிய மூவரையே குறிப்பிட்டுவந்த இளைஞர் உலகம், இப்பொழுது மற்றொருவரையும் பெற்றுவிட்டது. அவர்தான் கலைவாணர்.

அவரது - கலைத்தொண்டு சிறப்படையக் காரணமென்ன ? என்று கேட்பவர் பலர். அவரது சிந்திக்கும் ஆற்றலும், வாதிடும் திறமையும், மனதில் பட்டதை மறைக்காமல் வெளியிடும் உறுதியும், இவை அனைத்திலும், சிறந்து விளங்கும் இயற்கையான நகைச்சுவையுமே அதற்குக் காரணமாகும்.

அத்தகைய 'கலைவாணர்' கலையைப் பற்றி கொண்டுள்ள ஆழ்ந்த கருத்தை இக்கட்டுரையில் காணலாம்.]

கலைமகள் என்று சொன்னதும் வெள்ளைத் தாமரையும் அதன்மீது வீணையும் கையுமாக உட்கார்ந்திருக்கும் ஒரு பெண்மணியும் உங்கள் மனதில் தோற்றமளிக்கக் கூடும். கலைமகள் வணக்கங்களைப் பற்றிப் பாடியவர்களெல்லாம் வெள்ளைத் தாமரையையும் வீணையையுமே துணைக்கு அழைத்து அகமுருகியிருக்கிறார்கள். சித்திரக்காரர்களெல்லாம் சரசுவதியின் படத்தை இப்படியே தீட்டிவைத்திருக்கிறார்கள். ஜெர்மனி தேசத்தில் அச்சாகும் வியாபாரக் காலண்டர்களிலெல்லாம் இம்மாதிரியே சரசுவதியைப் படம் போட்டு விலைக்கு விற்று வருகிறார்கள். இந்தக் காலண்டர்களிலுள்ள சரசுவதிகளை நம் நாட்டில் பூக்களைப் போட்டு,

சந்தனப் பொட்டு இட்டு, தீபம் காட்டி பூசித்தும் வருகிறார்கள்.

கலைமகளை ஒரு இளம் பெண்ணாக்கி வைத்தார்கள் முதலிலே. பின்னால் ஒரு ஆசனம் கொடுக்க வேண்டாமா? தாமரை மலரை-அதுவும் - வெள்ளைத் தாமரையைக் கொடுத்தார்கள். பாவம்! எவ்வளவு நேரம்தான் இந்த மலரில் அம்மையார் அமர்ந்திருப்பாள்? மெல்லிய தாமரை இதழ்களில் அமர்ந்திருக்கமுடியுமா? அவைதான் ஒரு அம்மையாரின சுமையைத் தாங்குமா? இப்படியெல்லாம் நியாயமாகக் கேட்டால் பெரிய மனிதர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. பதில் சொல்லத் தெரியாவிட்டால் கேட்டவருக்கு அதிகப் பிரசங்கிப் பட்டம் சூட்டப் படுகிறது. கேள்வியைப் பற்றி யோசிப்பதே கிடையாது. ஏனென்றால் அவர்கள் பெரிய மனிதர்கள்!

கலை பொழுது போக்கிற்காக மட்டும் ஏற்பட்டதல்ல சிறந்த உண்மைகளையும் நீதிகளையும் நிலை நாட்டுவதற்குக் கலைகள் பயன்படுகின்றன; பயன்படுத்தப்பட வேண்டும். இதில் தான் கலைஞனின் ஆற்றலும் கடமையும் அடங்கி யிருக்கின்றன. அழிவு வேலைகளுக்கு அருங்கலைகளைப் பயன் படுத்தக் கூடாது. ஆக்க வேலைகளுக்கு ஊக்கம் கொடுப்பதே உண்மைக் கலைத்தொண்டு. மனதைத் தூய்மை படுத்துவது கலை! விரிவான எண்ணங்களை வளரச் செய்வது கலை! சிந்தனையைத் தூண்டுவது கலை! செம்மையான வாழ்க்கையைக் கடைப் பிடிக்கச்செய்வது கலை!

கலைகள் பிறப்பது மனவானிலே. மனம் என்றால் தூய்மையான மனம் - கள்ள மில்லாத உள்ளம். அதுதான் தூய உள்ளம் (Clear heart)- பரந்த மனம் - விரிந்த இதயம். இதனால்தான் விரிந்த வெள்ளைத் தாமரை மலரில் கலைகளுக்கெல்லாம் உற்பத்தி இடமாகிய கலைமகள் இருப்பதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அஃதன்றி கண்ட தாமரை மலர்களின் மீது தூங்குவதல்ல கலைமகள் வேலை. பரிசுத்தமான, பரந்த-கள்ளங்கபட மில்லாத மனத்தில் கலைகள் பிறக்கின்றன வென்பதுவே இதன் கருத்து. இம்மாதிரி வெகு அழகாகக் கற்பனை செய்து வைத்திருக்கிறார்கள் கலைப்பண்பும் அதன் மாண்பும் நன்குணர்ந்த நமது பண்டைத் தமிழ் மக்கள்.

புத்தம் புதுவாழ்வு

— இரா. குழூஉத்தலைவன் —

1. மாமரச் சோலையினில்—தென்றல்தரு
 வாசம் கமழுகையில்
தேமலர்ச் சூழலிலே—இயற்கையின்
 தேனைக் குடித்திருந்தேன்.

2. வண்ண நடையுடனே—கற்பனையே
 வடிவு கொண்டது போல்
கண்ணின் கடைவீச்சில்—இளைஞரைக்
 கலக்கும் கட்டழகி.

3. திங்கள் அசைவது போல்—உள்ளம்
 தேங்கி நடந்துவர
அங்கவள் தன்னழகைக்—கண்களால்
 அள்ளிப் பருகலுற்றேன்.

4. வன்னக் குழல் முகிலோ !—கனிஇதழ்
 மாணிக்கத் துண்டுகளோ !
மின்னல் விழிஒளியோ !—வெய்யலின்
 மேனி இவள்நிறமோ !

5. தென்றல் அசைநடையோ !—தவழும்
 திங்கள் எழில்முகமோ !
என்ன வியந்து நின்றேன்—பொல்லாத
 இளமை எண்ணத்தினால்.

6. அசைந்து வந்த மயில்—ஓர் மரத்
 தண்டையில் நின்றிடவும்
இசைந்து நோக்கி விட்டேன்—அவளும்
 ஏறிட்டுப் பார்த்துவிட்டாள் !

7. உண்டுதுயர் என்பபோல்—அவள்கண்
 உதிர்த்த நீர்த்துளிகள்
துண்டு விழும் நகர்போல்—உள்ளம்
 குலைந்தெழுந் திருந்தேன்.

8 உண்டு மதிமுகந்தான்—எனினும்
 ஒளி சிறிதும் இல்லை
கெண்டை நிகர்விழிகள்—அவற்றில்
 கிளரும் பார்வையில்லை.

9. வண்டை நிகர்கூந்தல்—எனினும்
மலர்கள் ஏந்தவில்லை
அண்டையிலே நெருங்கித்—துணிவுடன்
யாரென்று கேட்டுவிட்டேன்.

10. மாம்பழ வாய்திறந்து—தேனிலே
வண்டு முரன்றது போல்
"வீம்புகள் பேசிவளர்—இந்திய
வீரர்மலி நாட்டில்,

11. தேம்பிடும் வாழ்க்கையினில்—துன்பமே
சேரும் 'விதவை' எனும்
வெட்டி எழுத்துக்களால்—உலகம்
வீணில் வெறுப்பவள் யான்,

12. மட்டில் உணர்ச்சியுண்டு—பெறும்
மார்க்கம் சிறிதுமில்லை" (எனச்)
சட்டமுடன் உரைத்தாள்—உரைத்தேன்
தன்னிலை பெற்றிடவே.

13. ஆணுக் கொருநீதி—பெண்ணுக்கொரு
அநீதி கூறிடுவார்
வீணுக்குப் பேசிடுவார்!—உணர்ச்சிக்கு
விலங்கு பூட்டுவரோ?

14. கன்னியர் மாமணியே—நீஉளம்
கலங்கத் தேவையில்லை
தன்னுணர்வு கொள்வாய்;—பழைமையைத்
தரையில் வீழ்த்திடுவாய்!

15. உள்ளம் இழந்து விட்டேன்—உனது
கள்ள விழிக் கடையில்.
துள்ளி வரும் விடத்தை—இனிமேல்
தெள்ளமுதாக்கிடுவாய்!

16. புத்தம் புதுவாழ்வில்—இருவரும்
புரட்சி கண்டிடுவோம்
மெத்தப் பணிபுரிவோம்—திரவிடம்
வேறு பிரித்திடுவோம், [என்று கூறி]

17. வண்ணக் கரம்பிடித்தேன்—பதில்இல்லை
மார்பினில் சாய்ந்து விட்டாள்
விண்ணின் இரு சுடர் போல்—புதுவாழ்வு
இன்பத்தில் மூழ்கி விட்டோம்.

———

அறிவியல் தந்தை

ரோஜர் பேகன்

- அறிவழகன் -

அறிஞர்கள் தோன்றாத நாடுமில்லை, பிறவாத காலமும் இல்லை. ஆனால், அவர்களிலே பலர் வெளியிலே தெரியாதபடி மறைக்கப்பட்டும், மறக்கடிக்கப்பட்டும் வந்துள்ளனர். அதனினும் கொடுமை அவர்கள் கண்ட உண்மைகளை உரைப்பதையேகூட தடுத்ததும், தடையைத் தகர்த்தோரைத் தண்டனைக்கு ஆளாக்கியதுமாகும்.

பகுத்தறிவினையே பைத்தியக்காரத்தனம் என்று எண்ணிக்கொண்டிருந்த மக்கள் அறிஞர்களைத் தலையெடுக்கவொட்டாமல் அழித்தொழிக்கத் தயங்கவில்லை. ஆயினும் அவர்கள் இழைத்த கொடுமையைக் காட்டிலும் அதிவேகமாகப் பகுத்தறிவு பரவலாயிற்று. அறிஞர்கள் பெற்ற தண்டனைகள் யாவும் அவர்களது கொள்கைகளாகிய இரும்புத்துண்டுகளைச் சிந்தனையாகிய நெருப்பிலே இட்டுப்பழுக்கவைப்பதுபோலாயின. அறிஞர்கள் உற்ற துன்பங்களெல்லாம் அவர்களது கருத்துக்களுக்கு வலியூட்டின. அவர்களுற்ற துயரமே அவர்களது கொள்கைகளை உறுதிப்படுத்தின.

காட்டுமிராண்டிக் காலமுதல் காற்றில் பறக்கும் இக்காலம்வரை அறிவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி அளவிடற்கரிது. எனினும், சில நாடுகளில் மட்டுமே பகுத்தறிவு எளிதாகவும் விரைவாகவும் தடைகளைத் தகர்த்தெறிந்து பரவ முடிந்தது. பழம் பெருமைகளைப் பதிகம் பாடிவந்த நாடுகளில், அறிவுக் கதிரவன் உதிக்க அதிக காலம் பிடித்திருக்கிறது. புதிதாகத் தோன்றிய நாடுகளில் பழமையின் பிடிப்பு குறைந்திருப்பதால், அவை அறிவிலும் ஆற்றலிலும் முன்னணியில் நிற்க முடிகின்றன. எடுத்துக்காட்டாக, உலகத்திலேயே செல்வமும் செல்வாக்கும் மிகுந்துள்ள அமெரிக்கா பதினெட்டாம் நூற்றாண்டில்தான் அரும்பிற்று. இங்கிலாந்திற்கோ, கிறித்து பிறப்பதற்குமுன் வரலாறே கிடையாது. பழம் பெருமை மிகுந்த தமிழ் நாடும், கிரேக்கமும், எகிப்தும் இன்று பிற்போக்கடைந்துள்ளன.

அறிவுக்கும் அறியாமைக்கும் நடந்த போர், அறிவியலுக்கும் மதமூடநம்பிக்கைக்கும் நடந்த போரேயாகும். அறிவியல் உண்மையை நாடிச் செல்கிறது. ஆனால் மத நம்பிக்கை மக்களை மனிதத் தன்மையினின்றும் விலங்குத் தன்மைக்கு

இழுத்துச் செல்கிறது. அறிவியலும் மதநம்பிக்கையும் உண்மையில் என்றும் எதிரிகள். அறிவியலை அழிக்க வேண்டுமென்று மதம் பாடுபடுகின்றது. ஆனால் அறிவியலோ இத்தகைய நோக்கமின்றித் தனது கடமையை மாத்திரமே நிறைவேற்றி வருகிறது. அறிவியல் மதத்திடம் பட்டபாடு இவ்வளவென்று அளவிட்டுக் கூறுதல் இயலாது.

அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்களுக்கு மதத்தின் தகிடுதத்தங்கள் தெற்றெனப் புலனாயின. எனவேதான் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மதத்தின் பெயரால் பற்பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். மதம் பல தடவைகளில் பல்வேறு வகைகளில் அறிவியலை அழிக்க முயன்றது; எனினும் இறுதியில் தோல்வியே யுற்றது. மதம் அறிவியல் மீது தொடுத்த போர்கள் எண்ணிறந்தன. அவற்றுள் ஒன்றுதான் அறிஞர் ரோஜர் பேகனையும் அழிக்க முனைந்தது.

உலக அறிவியல் வரலாற்றின் முதல் பக்கமே ரோஜர் பேகனைப் பற்றியதாகும். அறிவியல் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபடும்படி செய்த முதல் அறிஞர் அவர்தான். மூடநம்பிக்கை என்ற காரிருள் ஆட்சி புரிந்துவந்த காலத்திலே அறிஞர் பேகன் ஒரு மங்கலான ஒளிக்கதிராகத் தோன்றினார். அவர் வாழ்ந்த காலத்திலே அவர் பெருமைபடுத்தப் படவில்லை; அவரை மதித்தோர் எவரும் இருந்திலர் என்றே கூறிவிடலாம். அதற்குமாறாக, தொல்லை துன்பம், இழிவு, ஏளனம் ஆகியவைகளே அவருக்குப் பரிசுகளாகக் கிடைத்தன. ஆனால் இன்று, அவர் பெருமையை மக்கள் உணர்ந்து கொண்டனர்.

ரோஜர் பேகன் கி. பி. 1214-ம் ஆண்டில் இங்கிலாந்தில் செல்வமிக்க ஒரு குடும்பத்தில்தான் பிறந்தார் எனினும், அவர் வாழ்க்கை ஒரு பெரும் போராட்டமாகவே இருக்கும் என்பதை அவர் இளமையிலேயே அறிந்து கொள்ளும்படியான நிலை ஏற்பட்டது.

தம் வாய்மொழியையே சட்டமாகவும், தம் மூச்சையே நீதியாகவும் கொண்டு, கொடுங்கோல் ஆட்சி புரிந்துவந்த அரசனால், அறிஞர் பேகனின் பெற்றோர் துன்புறுத்தப்பட்டனர். அவர்களின் சொத்து பறிமுதல் செய்யப்பட்டது. குடும்பத்தார் பலர் நாடு கடத்தப்பட்டனர். எவ்வளவு நியாயமான குறிக்கோளானாலும் அதனை அடைய இன்னல் இழப்பு என்னும் விலை கொடுக்கத்தான் வேண்டும்; என்ற உண்மையைப் பேகன் தமது இளம் பருவத்திலேயே உணர்ந்துகொண்டார்.

ரோஜர் பேகன் ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் போதே அவர் நுண்ணறிவும் ஆழ்ந்த சிந்தனையும் உடையவர் என்பது வெளிப்பட்டது. அவருடைய நுண்ணறிவு, அக்காலத்தில் வாழ்ந்து வந்த பல அறிஞர்களின் நட்பு அவருக்குக் கிட்டும்படிசெய்தது.

பேகன், தம் கல்லூரிப் படிப்பு முடிவுற்றதும், மதப்பாதிரி வேலையில் ஈடுபட்டார். அதனால்தான் மதத்தின் ஊழல்களை எல்லாம் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அவர் கி. பி. 1234-ம் ஆண்டில் படிப்பதற்காகப் பாரிஸ் மாநகரம் சென்றார். அப்போது அங்கு பெற்ற அறிவொளியில் மதப்புரட்டுக்கள், குறைபாடுகள், ஊழல்கள் ஆகியவற்றை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டார்.

"ப்ரான்ஸிஸ் பக்தர்கள்" (Franciscans) "டொமினிக் தொண்டர்கள்" (Dominicans) ஆகிய இரண்டு கூட்டத்தினராகக் கிறித்துவ சமயவாதிகள் பிரிந்து ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்கள் கொள்கையே சரியென்று கூறிப் பூசல் விளைவித்துக் கொண்டிருந்தனர். வெட்டி வேதாந்தத்தில் காலத்தைக் கூட்டிச்சுவராக்கிக் கொண்டுவந்த இவர்களைக் கண்டதுமே, பேகன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினர். அறிஞர் பேகன் அறிவியல் கல்வியில் தம் கருத்தைச் செலுத்திய பிறகுதான், மதவாதிகள் மக்களின் மடமையைப் பயன்படுத்திக் கொள்ளவே உண்மையை மறைக்கின்றனர் என்பதை உணர்ந்தார்.

பேகனின் அறிவியல் படிப்பு கல்லூரிப் படிப்போடு முடிந்துவிடவில்லை. அரேபிய நூல்கள் இவரை அறிவியலில் பெரும் பற்றுக்கொள்ளும்படி செய்தன. எதையும் ஆழ்ந்து சிந்தித்து ஆய்ந்து பார்க்கும்போது தான் உண்மை அறிவு பெறமுடியும் என்ற பேருண்மை இவருக்குப் புலப்பட்டது. இவ்வாறு இவர் சிந்திக்கும் ஆற்றல் பெறவே, மதக் கொள்கைகள் பெரும்பாலும் பொய்க் கலப்புற்றவை என்பதையும், கற்பனை என்னும் அஸ்திவாரத்தில் சுயநலமிகளால் கட்டப்பட்டவை என்பதையும் படிப்படியாகக் கண்டறிந்தார். மதக்கோட்பாடுகளில் உள்ள ஊழல்களை இவர் உணர்ந்ததும், தாம்கண்ட உண்மைகளை மக்களுக்கு எடுத்தியம்பி அவர்களை மடமையின் பிடியினின்றும் விடுவிக்க ஆவல் கொண்டார்.

"தத்துவஞானம் (Philosophy) முழுவதையும் மனிதன் துருவித் துருவி கற்றுவிட்டது; இனிமேல் கற்றயாவற்றையும் தொகுத்து, சுருக்கி ஒரு நூலாக வெளியிட வேண்டியதுதான் பாக்கி" என்று படித்த மக்கள் கூறுவதைப் பேகன் கேட்டார்.

அறியாமை அலங்கோலமாக ஆட்சி செய்வதைக்கண்ட பேகன் எதனை ஆதாரமாகக்கொண்டு தத்துவ ஞானத்தின் எல்லையைக் கண்டுவிட்டோம் என்று மதவாதிகள் கூறுகின்றனர் என்பதைச் சிந்தித்தார். விதி விலக்குகள் என்பன பற்றிய கட்டளைகளையும் வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, வாக்கு வாதங்களின் வாயிலாக அவற்றினின்றும் பெற்ற உண்மைகளை மதவாதிகள் அறிவியல் என்று கருதுவதே இவற்றிற்கெல்லாம் காரணம் என்பதை யுணர்ந்தார்.

பிறகு, உண்மை அறிவியலின் இன்றியமையாத பகுதி பரிசோதனை (Experiment) யாகும் என்பதைப் பேகன் கண்டார். பரிசோதனை இல்லையெனில் உண்மை யறிவு இல்லை என்பதை இப்பொழுது யாவரும் அறிவர். இன்று நாம் காண்கின்ற கணக்கற்ற புதுப்பொருள் யாவும் நீண்டகாலப் பரிசோதனையின் விளைவேயாகும். ஒரு பொருளைப் பற்றிய வாக்கு வாதத்தினால் மட்டும் திட்டமாக ஒரு முடிவுக்கும் வர இயலாது; பரிசோதனை அவசியமாகும். இதன் முக்கியத்துவத்தை அறிவியல் துறையில் நிலைநாட்டிய பெருமை அறிஞர் பேகனைச் சார்ந்ததாகும். எனவே, அவரை 'அறிவியலின் தந்தை' என்று அழைப்பது பொருத்தமேயாகும்.

பரிசோதனை மூலம் தெளிவு பெறலே உண்மை அறிவியல் என்று பேகன் மொழிந்த அன்றே அறிவியல் மதத்தின் பிடியிலிருந்து தளர்த்தப்பட்டு விட்டது. எனவே, பொய்யுரை மலிந்த மதத்தின்

தொடர்பிலிருந்து அறிவியலுக்கு மீட்சியளித்த அறிஞர் பேகனுடன் உண்மை அறிவியல் உதயமாயிற்று என்று கூறின் அது மிகையாகாது. உண்மையறிவை உய்த்துணர்ந்து கொண்ட பகுத்தறிவுச் சுடராம் பேகன் வழக்கமான கல்வி விவகாரங்களிலிருந்து விலகிக் கொண்டு தனியாகப் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டார்; மொழி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

அறிஞர் பேகனின் ஆசிரியர்கள் 'வெளிவேடதாரிகள். உண்மையில், அவர்கள் அறிஞர்கள் அல்லர். அவர்களின் வெளி வேடத்தை அறியாத மக்கள் அவர்களுக்குப் பெரு மதிப்பு அளிப்பதைக் கண்டு, பேகன் உள்ளம் குமுறினார். உண்மையறிவு பெற்ற ஆசிரியர் ஒருவரை உலகம் புறக்கணித்ததைக் கண்டு மனம் நொந்தார். உள்ளக் குமுறலும் மனநோயும் அவரது சீற்றத்தை வளர்த்தன. வெகுண்டெழுந்த அறிஞர் பேகன் வேடதாரிகளின் கபட நாடகங்களைக் கண்டித்து எழுதத் தலைப்பட்டார்.

பாரிஸ் கல்லூரியில் மதப்படிப்பில் 'அறிஞர்' (டாக்டர்) பட்டம் பெற்றபின் இங்கிலாந்து திரும்பினார். அங்கு 'ப்ரான்ஸிஸ் பக்தர்கள்' கூட்டத்தில் ஒரு பாதிரியாக வேலைக்கமர்ந்தார்.

அறிவியல், மொழி ஆகியவற்றைப் பற்றி இவர் செய்த ஆராய்ச்சி, ஆக்ஸ்பார்ட் முழுவதும் இவரின் புகழைப் பரப்பலாயிற்று. இவரது ஆராய்ச்சியைப் பற்றிப் பலப்பல கதைகள் மக்களிடை எழலாயின. மதவாதிகள் இவரைக் குறை கூறினர். இவர் பேரில் சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகள் எண்ணிறந்தன. இவர் மாந்தரிகத்தில் ஈடுபட்டுள்ளார் என்று கூட மதவாதிகள் பழி சுமத்தினர்.

"யாவற்றையும் ஆய்ந்து பார், சிந்தித்துப்பார், அறிவுக்குப் பொருத்தமானவற்றை ஏற்றுக் கொள், ஏனையவற்றை விலக்கு." என்ற கருத்துக்களை மக்களிடம் பரப்பி வந்தார். அறிஞர் பேகன். இதைக் கண்டு அஞ்சினர் மதவாதிகள். மதத்தின் ஊழல்களை மக்கள் புரிந்து கொள்வரே என மருண்டனர். மக்கள் உண்மை அறிவு பெற்று விட்டால் மதத்திற்கு மதிப்பில்லாது போய் விடுமே என்று சோர்வுற்றனர். அவர்களின் மண்டை உருளுமே என்று பீதியடைந்தனர்.

எனவே, மதியிழந்த மதவாதிகள், சூழ்ச்சி நிறைந்த சூதர்கள் ஒன்று கூடி ஓலமிட்டு, அறிஞர் பேகனின் அன்புப் பணியை நசுக்கத் திட்டம் தீட்டினர். அவர் ஆக்ஸ்பார்டில் கூட்டங்களில் பேசக்கூடாது என்று தடை பிறப்பித்தனர். வாய்ப்பூட்டு அறிவை அடக்கி விடும் என்று எண்ணினர் போலும்! அதுமட்டுமன்றி அவர் இங்கிலாந்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தனர். ஒரு வேளை மாந்தரிகச் சக்தியினால் இங்கிலாந்திற்கே இன்னல் விளைவித்திடுவார் என்று மந்தமதி கொண்ட மதவாதிகள் பயந்திருக்கக் கூடும்! நாகரிகமாக நாடு கடத்தும் முறையால், பாரிஸிலுள்ள 'ப்ரான்ஸிஸ் பக்தர்கள்' கூட்டத்தின் தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டார் பேகன்.

அங்குச் சென்ற பின், அவர் பத்து ஆண்டுகள் வரை 'காவல் தண்டனை'க்கு ஆளானார். அவரின் ஒவ்வொரு செயலும் காவலாளர்களால் கண்டிப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு வந்தது. அவர் எழுதுவதற்கே அனுமதிக்கப்பட

வில்லை, அறிஞர் பேகன் புரட்சித் தீக்கு வித்திடுவார் என்று கருதினர் போலும்! அறிஞரின் அறிவுக்கே சிறைச்சாலை அமைத்தனர்.

அறிஞர் பேகன் தனக்குச் செய்யப்பட்ட பொல்லாங்குகளைப் பொருட்படுத்தவில்லை. பொறுமையையும் இழந்து விடவில்லை. கொண்ட குறிக்கோளில் எத்துணையும் பற்று குறையாது காலங் கழிக்கலானார்.

அக்காலத்தில் 'கை டி போல்கியுஸ்' (Guy de Foulgues) என்பார் போப் ஆனார். அவருக்கு அறிவியல் ஆராய்ச்சியில் அளவு கடந்த ஆர்வம். ஆர்வத்தின் காரணமாக, அவர் அறிஞர் பேகனை அறிவியலைப் பற்றிய நூல் ஒன்றைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கட்டளை பிறப்பித்தார். காவலில்இருந்த பேகன் தமது அறிவியல் ஆராய்ச்சிக் கருத்துக்கள் உலகமக்களுக்குப் பயன்படாது போய் விடுமே என்று எண்ணியே, எந்த நூலியற்றுவதிலும் முயற்சி எடுத்துக் கொள்ளாமலிருந்தார். போப் அவர்களே அறிவியல் நூல் இயற்ற கட்டளை பிறப்பித்ததும், அறிஞர் பேகன் அளவிலா மகிழ்வெய்தினார். ஒரே மூச்சாக உட்கார்ந்து ஒன்றரை ஆண்டுகளுள் மூன்று பெரிய அறிவியல் நூல்களை எழுதி முடித்தார். எழுதுவதற்குப் போதிய வசதிகள் இல்லாத காலத்தில் ஒன்றரை ஆண்டுகளில் முப்பெரும் நூல்கள் இயற்றினார் என்றால், அஃது அறிவியல்பால் அவர் கொண்ட ஆர்வத்தையும் நம்பிக்கையையும் புலப்படுத்துகின்றதன்றோ?

இம் மூன்று அறிவியல் நூல்களையும் இயற்றி, மதத்தலைவர் போப்புக்கு அனுப்பியதும், அவர் தம் தாய் நாட்டிற்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டார். இங்கிலாந்து சென்றதும், அறிவியல் ஆராய்ச்சியில் தாம்கண்ட உண்மைகளை நூல்களின் வாயிலாகப் பொது மக்களுக்கு அறிவித்து வந்தார். கி. பி. 1271-ம் ஆண்டில் தத்துவஞான நிகண்டின் முதல் பாகத்தை (Encyclopaedic Studii Philosophiae, Part 1) வெளியிட்டார். இந்நூலே அவரைச் சிறைச்சாலையில் தள்ள காரணமாயிற்று.

இந்நூலில் அறிஞர் பேகன் கிறித்து மதக் குருக்களின் அறியாமையையும், துறவிகளின் கபட நாடகச் செயல்களையும் வெட்ட வெளிச்சமாக்கினார். மக்களை மடமையில் ஆழ்த்துகிற, கல்வித்துறையில் மக்களை முன்னேற்ற மடையாமல் தடை செய்கின்ற 'முன்னோர் வழியே தம் வழி' என்ற பிற்போக்குக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார்.

மக்களின் மயக்கத்தைப் போக்க, அறிவுக் கண்ணைத் திறக்க மாபெருந் தொண்டாற்றிய மாவீரன் பேகனுக்கு, இதற்காகக் கிடைத்த வெகுமதி என்ன? அந்தோ! பதினான்கு ஆண்டுகள் சிறை வாசம். மக்களின் மடமையைப் போக்க அறிவு நூல் எழுதியது பெருங்குற்றம்—மன்னிக்கமுடியாத குற்றம்—என்று கூறி, இந்தக் கொடுந் தண்டனை விதித்தார் வஞ்சகத்தின் உருவான போப்அஸ்காலி.

அறிஞர் பேகன் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் அவருக்கு விடுதலை கிடைத்தது. அவரின் வாழ்க்கையில் இருபத்திநான்கு ஆண்டுகள், சிறையிலும் காவலிலுமாகப் பயனற்றுக் கழிந்தன என்றாலும், மதக் குருக்களின் வஞ்சகத்தை அம்பலப் படுத்தியும், மதக்கோட்பாடுகளில் மலிந்து

காணும் பொய்யுரைகளை மன்றத்தில் வெளியிட்டும், "அறிவியல் வளர்ச்சியால் தான் அவனி உயரும்" என்ற தனது குறிக்கோளை நிறைவேற்றி விட்டதில் அவருக்குப் திருப்தி.

அறிஞர் பேகன் தொலைநோக்கியைச் (Telescope) செய்யும் முறையை அறிந்திருந்தார் எனினும், அவர் ஒரு தொலைநோக்கியை உருவாக்கினார் என்று கூறுவதற்கில்லை. துப்பாக்கி மருந்து இவரால் கண்டுபிடிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டாலும், அரேபியர்கள் இவருக்கு முன்னரே அதைக் கண்டுபிடித்திருந்தனர். இதைப் போன்று மூக்குக் கண்ணாடியைச் செய்யும் முறையையும் இவர் அறிந்திருந்தாலும், செய்து முடித்தார் என்று கூறுவதற்கில்லை. அறிஞர் பேகனே சோதிட சாத்திரத்திலும் இரசவாதத்திலும் நம்பிக்கையுடையவராயிருந்தார் என்றும் தெரிகிறது. இக்குறைகளும் குற்றங்களும் அவரிடம் காணப்பட்டதில் ஆச்சரியமில்லை, அவர் வாழ்ந்த காலத்தை நோக்கினால். அவரது வாழ்விலே நிம்மதியிருந்திருந்தால், அவரது தொண்டு மேலும் சிறந்திருக்க முடியும். எனினும், மதக் கழனியில் அறிவியல் பயிராகாது என்ற உண்மையை உலகிற்கு வலிவுற உணர்த்தியதே மிகப் பெரிய தொருதொண்டாகும்.

இத்தகைய பேகனை இங்கிலாந்து எழுநூற்றாண்டுகளுக்கு முன்பே பெற்றிருந்தது. ஆனால் தமிழ்நாடோ பேகனைப் போன்றதொரு சிந்தனைச் சிற்பியைச் சென்ற நூற்றாண்டிலே கூட பெறவில்லை. வடலூர் இராமலிங்கரோ, ஓரளவில் மட்டுமே பேகனைப்போன்று விளங்கினார். முற்றிலும் பேகனை ஒப்பத்திகழும்ஒருவர் தமிழகத்தில் என்றேனும் தோன்றினார் என்றால், அவர் இந்த நூற்றாண்டில் வாழ்ந்துவரும் பெரியார் இராமசாமியாகத்தான் இருக்க முடியும் — உருவத்திலேயும் உள்ளத்திலேயும். எந்தக் கொள்கையையும் சிந்தனையாகிய சோதனைக் குழலில் இட்டு அலசிப் பார்க்கும்படி பெரியார் கூறினால், அதைச் சமயவாதிகளும் சுயநலமிகளும் எதிர்க்கத்தான் செய்வர். ஆயினும், குறிக்கோளை நிறைவேற்றுவதில் பேகனை நிகர்த்த பெரியார் வெற்றி பெற்றே தீருவார், பணி பலனளித்தே தீரும், என்ற உறுதி நமக்குண்டு.

மூட நம்பிக்கையாகிய அடிமை விலங்கைஉடைத்தெறியஒரு பேகன் நமக்குக் கிடைத்து விட்டார். அறிவியல் வளர்ச்சிக்கு சி. வி. ராமன்கள் தேவைதான். பலப்பல இராமன்கள் தோன்றத்தான் வேண்டும். ஆனால், இராமசாமிகளுக்குப் பின்னால்தான் பலர் இராமன்களாக முடியும். மதத்தினால் ஏற்பட்டுள்ள மாசு துடைக்கப்படா முன்னம், கேடு ஒழிக்கப்படா முன்னம், அறிவியல் வளர முடியாது. அறிவியல் இராமன்கள் மதவியலை என்றும் மறுத்தே ஆகவேண்டும். மறுக்கா விட்டாலும், அவர்களால் வளர்க்கப்படும் அறிவியலின் விளைவாக மதநம்பிக்கை மாய்ந்தே தீரும்.

அறிவியல் தந்தை பேகன் வரலாறு, இந்த உண்மையைத்தான் நமக்கு உணர்த்துகிறது.

வலை கண்ட மான்

பேராசிரியர் மு. வரதராசனார்

அன்பான குடும்பம் ஒன்று. அதில் ஓர் இளம்பெண் வளர்ந்து வருகின்றாள். உற்ற வயது அடைந்த அவள் வாழ்க்கையில் ஒரு மாறுதல் நிகழ்கின்றது. தன்னைக் கண்மணியாகக் கொண்டு போற்றி வளர்த்த தாயினிடம் பேரன்பு கொண்டவள் அவள். அந்தப்பேரன்பு இப்போது இடம்மாறி விட்டது. தனக்கு ஒத்த தலைவனை இயற்கைச் சூழலின் இடையே ஒரு நாள் கண்டாள். காதல் கொண்டாள். மனத்தின் கண் இருந்த மாறுதல் பழக்க வழக்கங்களிலும் ஒருவாறு தோன்றலாயிற்று. தன்னிடம் முன்போல் பழகவில்லை என்பதையும் அன்னை உணர்ந்தாள். பலவாறு ஐயுற்றாள். தன்னருமை மகளுக்குச் சில சொல்லி அவளைத் திருத்தலாம் என நம்பினாள். தான் வேறு அவள்வேறு என அறியாமல் வாழ்ந்த அன்பு வாழ்க்கையில் அவ்வாறு நம்புதல் இயற்கைதானே! அன்பு மிக்கவர்களிடம் அறிவும் ஆராய்ச்சியும் ஒருபுறம் ஒதுங்கி நிற்கும் போலும்! தாய் நேற்றிருந்த தாயாகவே இருக்கிறாள். மகளோ பழைய மகள் அல்லள். ஒருத்தியின் மகள் என்ற நிலைபோய் ஒருவனுடைய காதலி என்னும் நிலைமையை உற்றிருக்கின்றாள். மகளாக இருந்து தாயினிடம் காட்டும் அன்பைவிடக் காதலியாக இருந்து காதலனிடம் காட்டும் அன்பு பெரியது, சிறந்தது, ஆற்றல் மிக்கது. எனவே, மகள் மனத்தில் மாறுதலே அல்லாமல் வளர்ச்சியும் காண்கின்றோம். தாய் மனமோ மாறவும் இல்லை; வளரவும் இல்லை. இந்த உண்மையறியாத காரணத்தால், தாயின் முயற்சி பயன்படாமல் போகின்றது. புதிய ஆற்றல்பெற்ற காதல் வெற்றி பெறுகின்றது. தாய் தோற்கின்றாள். மகள் வெல்கின்றாள்.

"அருமை மகளே! நீ முன்போலவே இனியும் விளையாடாதே. நினைத்த இடமெல்லாம் சென்று திரியாதே. நீ வளர்ந்திருக்கின்றாய். உற்ற பருவம் அடைந்துள்ளாய். ஒன்றும் அறியாத பேதைப் பெண் அல்லை. ஆகையால், இனிமேல் வீட்டில் காவலோடு இரு. வெளியேபோக வேண்டாம்," என்று அன்னை எடுத்து உரைத்தாள். கேட்ட மகள் மறுமாற்றம் கூறவில்லை. அவள் உள்ளத்தில் ஒருசிறு போராட்டம் நிகழ்கின்றது. "அன்னை நல்லவள்தான். நல்ல எண்ணம் உடையவளே. நம்மீது அன்பும் கொண்டவளே. நம்

காதல் வாழ்வை எவ்வாறோ அறிந்தாள்போலும்! ஆயினும் எவர்க்கும் நாம் தீங்கு செய்யவில்லையே. தூய்மையான காதல் வாழ்வைப் போற்றுதல் நம் கடமை. காதலரைக் காணாமல் வீட்டின் ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்வதைவிட உயிர்துறத்தல் நல்லதன்றோ? இவ்வளவும் ஏன்? நம் உரிமையைக் காத்துக் கொண்டு, தலைவர்க்கு அறிவித்து அவருடன் சென்று வாழ்தலே என்கடமை'' எனத் துணிந்தாள்.

உரிமை உணர்வால் ஆற்றல் பெற்ற அவள் எண்ணம் நிறைவேறியது. ஒன்றுநினைக்க ஒன்றாய் முடிந்ததே என்றுதாய் வருந்துகின்றாள். மகள் பிரிந்த காரணத்தால் நல்லவீடு பொலிவிழந்ததே என்று நெஞ்சழிகின்றாள். வீட்டின் காவல் கடுமையும் வீணாயிற்றே என்கிறாள். மகளைத் தேடிச்சென்று அலைகின்றாள். காட்டுவழியிலே ஒரு பெண் மானைக்கண்டு முறையிடுகின்றாள்.

'முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்தழை யுடையை
அலமர லாயமொடு யாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவித்
தன்சிதை வறிதல் அஞ்சி இன்சிலை
ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையின் போகி யீங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மகள்
இச்சுரம் படர்தந் தோளே'

திடீரென நேர்ந்த மகளின் பிரிவு தாய் மனத்தைப் பெரிதும் கலக்கி விட்டது. கலக்கம் முற்றி ஒருவகைப் பித்து உற்றாள் தாய். காட்டு வழியில் கண்ட பெண் மான்—அழகிய நவ்வி—அவள் மனத்தை ஒரு சிறிது தெளிவித்தது. பெண்மானின் மென்மையும் அதன் ஒலியின் இனிமையும் தாய்க்கு மகளைப்பற்றி நினைவூட்டின. அதன் அருகே நிற்கும் ஆண்மானைக் கண்டபோது தன் மகளுக்குத் துணைவனாய்ச் சென்ற தலைமகனை நினைத்தாள். அந்த மானிடம் முறையிடும்போது தன் அன்பைப் புலப்படுத்துகின்றாள். தன் கருத்தை அதற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், மான் அறிந்த ஓர் உவமையைக் கூறுகின்றாள். 'நல்ல இல்லமாய் இருந்த எங்கள் வீடு அவளுக்கு வலையாய்த் தோன்றியது போலும்! வலையைக் கண்ட

பெண்மான் போல அவள் வீட்டைத் துறந்துசென்றாளே', என வருந்துகின்றாள். இந்தத் தாயும் காதல் நெறியில் உள்ளத்தைப் பண்படுத்தியவள். ஆகையால், காதலர் மனநிலை உணர்ந்து பேசுகின்றாள். சிறந்த வீடும், அஞ்சத்தகுந்த வலையாக மாறி விட்டதை உணர்கின்றாள்! உரிமையால் வாழ்ந்து உணர்ந்தவர்களே பிறர் உரிமையை மதித்தல் கூடும். 'நம் சொல்லை மீறி நம் அன்பை வெறுத்து நம்மையும் புறக்கணித்து மகள் சென்றனளோ' என்று வெறுப்போ, வெகுளியோ தாய் கொள்ளவில்லை. நம்வீடு வலையாய்த் தோன்றுமாறு அவள் மனம் மாறிற்றே என்றே வியப்புறுகின்றாள்.

"இவ்வளவு விரைந்து தேடி வந்தும் என் அருமை மகளைக் காணமுடியவில்லையே. பசுநிரை கவர்ந்த கள்வரைத் தொடர்ந்து செல்லுவோர் போன்று யான் விரைந்து வந்தேனே! என் முயற்சி பயனற்றுப்போயிற்றே" என நோகின்றாள்.

'ஆயிடை
அத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செல்லேன் இத்தலை
நின்னொடு வினவல் கேளாய்'

உடனே அவள் மனம் இந்நிலையினின்றும் மாறுகின்றது. இத்தகைய அருஞ்செயல் செய்யத் துணிந்த தன்மகள்எவ்வாறு இந்நிலையுற்றாள் என வியக்கின்றாள். சில நாட்களுக்கு முன்னே இளம் பெண்ணாய் மலைச்சாரலில் திரிந்து பலாமரத்தின் நிழலில் விளையாடிய அவள் இளமையை எண்ணுகின்றாள். தன் நெஞ்சில் நிலைத்த பேரன்பை வளர்த்த அந்த இளம்பெண் உருவை அவளால் மறக்க முடியவில்லை. பொற்காசும் புலிப்பல்லும் தனிமணியும் கோத்த தாலியை அணிந்து, அழகிய அசோகந்தளிரால் ஆகிய தழையுடையை உடுத்துத் திரிந்த அவ்வுருவை நினைக்கின்றாள். அவளை அடிக்கடித்தான் கண்ட இடமாகிய பலாமரத்தின் நீழலையும் அம்மரத்தின் கிளைகளிலிருந்து பழச்சுளைகளைத் தின்னும் குரங்குகள் கொட்டைகளை உதிர்த்தலையும், அவ்வெண்ணிறக்கொட்டைகளை தன்மகள் எடுத்துச் சேர்க்கும் காட்சியையும் நினைந்து நினைந்து பெருமூச்செறிகின்றாள்.

'பொன்னொடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
ஒலிக் குழைச் செயலை உடைமாண் அல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉம்
கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே!'—(அகநானூறு-7)

பொங்கும் புதுவாழ்வு

கருணை

1. வெயிலாலும், பனியாலும், மழைக்காற்றாலும்
வெம்மையுறத் தாக்குண்டும், மனம் வெதும்பி
அயராது, காலமெலாம் உழைத்துழைத்தே
அரும்பாடு படுகின்றோம் பாமரர்கள்.
வயிறார உணவுண்டா? துணியுமுண்டா?
வகையான குடிசையுண்டா? வசதி யுண்டா?
பயிலாத சிறுவருக்குப் பள்ளி யுண்டா?
பாராள்வோர் நமையுயர்த்தப் பண்புமுண்டா?

2. "இதுவாழ்வா?" எனமற்றோர் ஐயுற் றேங்க
இருக்கின்றோம் சாகவில்லை; எனினும் இன்று
மெதுவாக எழுகின்றோம்; விழித்து விட்டோம்!
வேதனையின் எல்லையிலே புரட்சியன்றோ?
எதுவாழும், ஏழையிலோர் கோடிப் பேர்கள்
எதுவரினும் சரியென்று திரண்டு விட்டால்!
புதுவாழ்வுப் போரிடுவோம்! வெற்றி காண்போம்
புரட்சிமிகும் அச்செயலில் பலியாய்ப் போவோம்.

3. பொங்கலெனும் தமிழ்த்திருநாள் புனித நாளாம்;
பூமியெங்கும் வளங்கொழித்தே முற்றிச்சாய்ந்த
செங்கதிரின் தாளறுத்துக் களத்திற் சேர்த்துச்
செந்நெல்லைத் தனிப்படுத்தி அரிசி குத்தித்
தங்கநிறப் பானையிலே பாலைப் பெய்து
சர்க்கரையும் நெய்யுமிட்டுப் பொங்கலாக்கிச்
செங்கரும்பு தேன்கதலிப் பழத்தோ டுண்போம்;
சிறுவருடன் அனைவரும் புத்தாடை பூண்போம்!

4. 'உழவருளந் துன்பமெலாம் மறந்து விட்டே
உவகையினாற் பொங்கிடுநாள் இந்நாள்" என்பர்.
பழையபடி நாளைமுதல் உழைப்போர் யாவர்?
பழையமுறை மாறுதற்கும், பாடு பட்டும்?
உழுபவர் உயருதற்கும், உதவுவோர் யார்?
உலகத்து மக்களுள்ளே தமையும் சேர்க்க
விழைபவர் யார்? அவர்முயற்சி வென்றா லன்றோ,
விம்முதல்கள் மாய்ந்தபுது வாழ்வு பொங்கும்.

பொங்கல் விழா

அ. மீனம்பாள்

பண்டைக் காலந் தொட்டு வண்டமிழ் முன்னோர் கொண்டாடிவரும் விழாக்களுள் பொங்கல் திருநாள் தலைசிறந்ததாகும். அஃது ஆண்டிற்கோர் முறை, தைத்திங்கள் தலைநாளன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்விழா பண்டைக்காலம் முதலே கொண்டாடப் படுதலினாலும், தமிழ்நாடு தவிர்த்த பிற நாடுகளில் காணப் பெறாமையாலும், அதைக் கொண்டாடும் நாளைத் தமிழ்த்திருநாள் என்பர். அந்நன்னாளே, தமிழ்ஆண்டின் முதல்நாளும் ஆகுமென்பர் அறிஞர்.

பொங்கல் விழாவன்று, பெரும் பானையில் பொங்கல் அட்டு, பலரும் உண்டு களித்தலால் அதனைப் பெரும் பொங்கல் என்றும் மொழிவர். அந்நாள்—உழுதுண்டு வாழ்வாரின் பெருநாள். உழைப்பாளரின் உவகையை ஊற்றுபோற் பெருக்கிவிடும் திருநாள். உழைப்பின் பயனை உழைத்தவர் பெற்றதைக் காட்டும் நன்னாள். ஆனால், இன்றோ உழைப்போரேயன்றி உப்பிற்கும் பயனிலாது உலவி, உடலை வளர்த்து, உருவத்தால் மக்களாகவே தோன்றும் பலரும் தமது களஞ்சியத்தை நிரப்பிக் கொண்டு தம்நலத்தை வளர்த்துக் கொள்ளும் நாளாக மாறிவிட்டது.

'உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்'

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, தமிழர்களுள்ளே தலைசிறந்து விளங்கிய உழவர் பெருமக்கள் ஆண்டிலே ஆறுதிங்கள் அல்லும் எல்லும் அரும்பாடுபட்டு சேயைவளர்க்கும் தாயென, கண்ணுங்கருத்துமாய்ப் பயிரை வளர்க்கின்றனர். நெற்கதிர் முற்றியபோது, ஆடவரும் மகளிரும் ஒன்றுகூடி உவகைகொண்டு அறுவடை செய்கின்றனர்.

இவ்வறுவடை, மார்கழியின் இறுதிக்குள் முடிந்துவிடும். பின்னர் தைத்திங்கள் மகிழ்ச்சியூட்டிப் பிறக்கும்.

'சீரைத்தேடின் ஏரைத்தேடு,' என்ற உண்மை மொழியைக் கடைப்பிடித்து உழுது, 'தொழுதூண் சுவையின், உழுதூண் இனிது,' என்றமெய் மொழிப்படி, உழவு தந்தபயனை, உண்டு மகிழ்வர்.

விழாநாளன்று, தூய்மை படுத்திய தமது இல்லங்களை மகளிர் கோலமிட்டுக் கோலஞ்செய்வர். ஆடவரோ தோரணங்கள் கட்டியும் கொடிகளை உயர்த்தியும் அணிமணி மாடங்களை அழகு பெறச்செய்தும் உவகை பெறுவர். ஒவ்வோர் மனையும் மணமகள் போன்று மாண்புற்று இலங்கும். பின்னர் புதியதாய்க் கொணர்ந்த நெல்லைக் குற்றி, அரிசியாக்கி, அதனைப் புது மட்கலத்திலிட்டு, தீம்பாற்பெய்து, தீஞ்சுவைப் பொங்கல் ஆக்குவர். புதிதாயட்ட பொங்கலுடன், கன்னல், கனி முதலியவற்றையும் முற்றத்திலே வைத்து, கதிரவனுக்கு நன்றி செலுத்தும் எண்ணத்தால் வழிபாடு செய்வர்.

உழவர்தம் தொழிலுக்கு இன்றியமையாத வெப்பம், மழை முதலியவற்றைக் கதிரவனாலேயே பெறுகின்றோம் என்ற உணர்வு இந்நன்றி வழிபாட்டைத் தோற்றுவித்தது போலும். அவ்வழிபாட்டிற்குப் பின்,

பெரிய வாழை இலையில் புதிய பொங்கலை யிட்டு, குடும்பத்தாரும் விருந்தினரும் ஒருங்குகூடி, உண்டு களிப்பர்.

இவ்விழா, மிகப்பழமையானது என்ற உண்மை, பிட்டங்கொற்றன் என்பானைக் கருர் கந்தப்பிள்ளை சாத்தனார் என்ற புலவர் சிறப்பித்துப் பாடியதாக வரும் புறநானூற்றுப் பாடல் ஒன்றால் வலியுறுகின்றது. அப்பாடலால்.—புதிதாய் விளைந்த தினையை நன்னாளின் கண் அட்டுண்ண மக்கள் விழைந்தனர் என்பதும், மானிறைச்சியைப் புழுக்கிய புலால் நாற்றம் கமழும் பானையைக் கொணர்ந்து, நிணம் தோய்ந்த வெளிய நிறமுடைய அதன் புறத்தைக் கழுவாமலேயே, மரை ஆவின் தீம்பாலை உலை நீராக அதில் வார்த்து, புதிதாய்க் கொணர்ந்த தினையையும் இட்டு, சந்தன விறகின் தீயால் சோறு அட்டனர் என்பதும் தெரிகின்றன. இந்நிகழ்ச்சி, இக்காலை வழங்கும் பொங்கலோடு ஒப்புமை கொண்டுள்ளது இனிது விளங்கும்.

உழவுத் தொழிலுக்குப் பெரிதும் துணையாயிருக்கும் பகடுகளுக்கும், தீம்பாலை அளித்துதவும் பசுக்களுக்கும் பொதுவாகப் பிற வளர்ப்பு விலங்குகட்கும், சிறப்பு செய்யும் நாளாக மறுநாளைக் கொண்டனர். அன்று ஆடு மாடுகளைக் குளிப்பாட்டி, ஆவாரம்பூ, கரும்புப் பிளப்பு, நெட்டி முதலியவற்றைக் கொண்டு தொடுத்த மாலைகளை அவற்றிற்கு அணிவித்து, ஊரின் பொதுமன்றிலே அவற்றைத் திரட்டி இளைஞர்களெல்லாம் கூடி ஒலி எழுப்பி, மகிழ்ச்சியூட்டி, விரட்டுவர். பொங்கலோ பொங்கல்! என்ற பேரொலி வானளாவும். இவ்விழா நாளன்று, தமிழகத்தின் சில பகுதிகளிலே பண்டைக்காலத்தில் முல்லை நில மக்கள் போற்றிய "ஏறுதழுவுதல்" என்ற வீர விளையாட்டு நடைபெறுகின்றது.

தைத்திங்கள் மூன்றாம் நாள் 'கரி நாள்' என்றும், 'கன்னிப் பொங்கல்' என்றும் பலவாறு அழைக்கப்படும். அன்று கன்னிப் பெண்கள், புதிதாய் அட்டில் தொழில் பழகத் தொடங்குவர். பெண்கள் பலரும் குரவைக் கூத்தாடுவதும், கும்மியாடுவதும் ஆடவர் பலரும் கிள்ளைத் தட்டு, உப்பங் கோடு முதலிய ஆட்டங்களாடுவதும் வழக்கம். முதியோருங்கூட ஆட்டங்களிலே ஈடுபடுவர். இவ்வாறு மூன்று நாளும் இவ்விழா நடைபெறும்.

ஆனால், இதனைச் சிறப்பாகக் கொண்டுள்ள உழவர் நிலை இன்று எவ்வாறு உள்ளது? உழைப்பின் பயனைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் துய்த்து மகிழ்ந்த உழவர், இன்று ஒருபடி நெல்லுக்கும் ஊரார் கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. உழவரின் வாழ்வு சிதைந்துவிட்டது. எனினும் 'பொங்கல்' தவறவில்லை. எப்படித் தவறும்? ஆண்டு பிறக்கத் தவறினாலன்றோ பொங்கலும் தவறும். ஆனால் இந்த நாளிலேனும், உழவரின் நிலையை ஊரார் எண்ணிப் பார்க்கட்டும்.

உழவர் இந்நிலை பெறக் காரணமென்ன? இந்நிலை நீடிக்கலாமா? உழவர் மக்களை நிரம்பிய நம் நாடு, இந்நிலை மாறாமுன்னம் மீட்சியுறுவதெங்ஙனம்? உயர்வது தான் எப்படி?

எனவே, இந்நிலை மாற, எல்லோரும் வாழ்வு பெற, அனைவரும் மக்களாகத் திகழ, தமிழகம் தழைக்க, திராவிடம் மீள, புது வாழ்வு பூக்க, இத்திருநாளில் உறுதி பூண்டு பணிபுரிவோமாக. வாழ்க பொங்கல்! வெல்க உழவர்!!

ஒலிக்கும் சிலம்பு

இரா. குழூஉத்தலைவன்

மங்கல வாழ்த்து

அதோ சிலம்பின் ஒலி கேட்கின்றது! முத்தமிழ் முழங்குகின்றது! செவிகளில் இன்பத்தேன் வழிந்தோடுகிறது. வாழ்க! இளங்கோ; வாழிய! சிலம்புதந்த செல்வம் என வாழ்த்துகின்றோம்.

எங்கும் நிறைந்த-இன்பமளிக்கும் இயற்கையை வாழ்த்தத் தொடங்குகின்றார் புலவர். பொங்கி வழிகின்ற புலமை வெள்ளத்தில், தன்னைமறந்த இன்பம் நுகரத் தலைப்படுகின்றோம் நாம்.

பிற்காலத்தில் நூல் செய்ய வந்த புலவர்கள் பற்பல கடவுள்களைப் பற்பல வகைகளில் வாழ்த்தினர். ஆத்திசூடி - இளம்பிறை அணிந்தோன், பாற்கடலில் பள்ளிகொண்டோன், பன்னிருகையன், பரமலோகத்தில் வாழ்பவன், மகம்மது நபிக்கு மறையருள் புரிந்தோன் என்ற முறைகளில் படர்ந்தன அவர்கள் வாழ்த்துக்கள். அதிலும் தாம் வழிபடும் கடவுளை வாழ்த்தலும், நூலுக்கு உரிய கடவுளை வாழ்த்தலும் என இரண்டு வகையாலும் வாழ்த்தினர். பொய்யும், கற்பனையும் வேறுபாடு தெரியாமல் அவைகளில் குழம்பிக் கிடக்கும். இந்த நிலைகளை எல்லாம் கடந்து நிற்கின்றார் இளங்கோவடிகள்.

கடவுளை இயற்கைப் பொருள்களில் வைத்து வழிபடுவதும் ஓர் அழகல்லவா! இல்லாவிடில் ஏன் இவ்வளவு இன்பம் நமக்கு ஏற்படுகின்றது!

முதன் முதலாக வெண்கதிர் பரப்பும் திங்களை வாழ்த்துகின்றார்.

“திங்களைப் போற்றுதும்!
திங்களைப் போற்றுதும்!

ஓ! நல்லதுதான். மங்கல வாழ்த்துப் பாட வருபவர் மங்கலச் சொல்லாகிய “திங்கள்” என்பதையே முதலில் தொடங்கி அதற்கு வாழ்த்தும் கூறுகின்றார் போலும். என்று நாம் எண்ணுகின்றோம். அதுதான் இல்லை ‘மங்கலச் சொல்லை முதலாகக் கொண்டு பாடுதல் என் காலத்திலெல்லாம் இல்லையே. “நீயின்னன்ன” என்றது போலத் துவங்கும் பத்துப்பாட்டு அடிகளும், பல புறநானூற்றுப் பாடல்களுமே அதைக்காட்டுமே. ஆதலின் அதைப் பற்றி நான் ஏன் கவலைகொள்ள வேண்டும்’ என்று புலவர் கூறிவிட்டாலும். அவர் மேலும் கூறும் அடிகள் இந்தக் கருத்தைத்தான் காட்டுகின்றன.

‘பின்பு எதற்காக இவர் திங்களைப் பாடவேண்டும்; ஞாயிறு அதைவிடச்

சிறந்ததாயிற்றே; அதை இவர் மறந்துவிட்டாரோ' என்று நாம்ஐயப் படுகின்றோம். அந்த ஐயமும் மேலே செல்லச் செல்லத் தீர்ந்துவிடுகின் றது.

"கொங்கு அலர் தார்ச்சென்னி
குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகு அளித்தலான்."

[கொங்கு-தேன். தார்-மாலை. சென்னி-சோழன். அங்கண் உலகு-இடம் அகன்ற உலகம். அளித்தலால்-காப்பாற்றுவ தால்]

இப்போதுதான் புலவரின் எண் ணம் விளங்குகின்றது. சோழ மன் னனுடைய குடையைப் போலவே அத்திங்கள் இருக்கின்றதாம்! ஆத லால் தான் அத்திங்களை முதன் முத லாக வாழ்த்துகின்றார். அவ்வாறு புலவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளத்தக்க சிறப்பு என்னதான் அக்குடையில் இருக்கின்றது? பாடலை மீண்டும் ஓர் முறை படித் தால் காரணம் விளங்கும்.

எப்போதுமே புலவர்கள் ஒரு பொருளுக்கு வேறு ஒரு பொருளை உவமையாகக் கூறும்போது தாம் எடுத்துக்கொண்ட பொருளைவிட அதற்கு உவமையாகக் கூறும் பொருள் சிறந்ததாகவே இருக்க வேண்டும் என்பார்கள். அதாவது புலவர் எடுத்துக்கொண்டு வாழ்த்தும் பொருள் திங்கள். அதற்கு உவமை யாகக் காட்டிய பொருள் குடையல் லவா! முன் இலக்கணத்தின்படிப் பார்த்தால் திங்களைக் காட்டிலும் குடை சிறந்திருக்கத்தானே வேண் டும். ஆம்! புலவரின் எண்ணம் அதுதான். அவர் அவ்வாறே கருது கின்றார். அக்குடையினிடத்தில் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு. ஆத லால்தான் குடையைப் போன்று இருப்பதால் திங்களை வாழ்த்துவோம் என வாய் நிறைய வாழ்த்துகின்றார். சோழனது குடை வெண்மை நிறமா னது; திங்களும் வெண்மைதான். இதனைக் "கதிர் வெண்குடை" என்று அவரே கூறிவிட்டார். சோழ னின் குடை, ஏழையென்றோ, செல் வன் என்றோ, ஆண்டான் என்றோ வேறுபாடு கருதுவதில்லை. எல்லோ ருக்கும் ஒரே முறைமை, ஒரே அளவு. பயனும் அப்படியே. இதைப் போலத்தான் திங்களும் வழங்குகின் றது. இரண்டும் உலகத்திற்கு இன்ப மூட்டுகின்றன; காவலும் செய்கின் றன. மேலும் இரண்டும் வட்டவடி வமானவை. ஆகா! பண்பு, தொழில், பயன் என்ற மூன்று தன் மைகளும் அல்லவா இந்த உவமை யில் அடங்கிக்கிடக்கின்றன!

சோழன் திங்களின் மரபில் பிறந் தவன் என்று கூறுவது வழக்கு. ஆகவே அவன் குடி முதல்வனாகிய திங்களைச் சோழனைப்பற்றிய பகுதி யில் வாழ்த்துவது முறைமையல் லவா! இதனால்தான் உலகம் உவப்ப வலன் திரிந்து சுழலும் ஞாயிற்றைப் போற்று முன் திங்களைப் போற்றி னார் போலும்!

இனி ஞாயிறு வாழ்த்தப்படுகின் றது;

"ஞாயிறு போற்றுதும்!
ஞாயிறு போற்றுதும்!

பொருத்தமானதுதான்; 'திங்க ளைப் போற்றியவுடன் ஞாயிறு போற்றுதல் முறைமைதானே, என நாம் நினைக்கின்றோம். இதற்குள் ஞாயிற்றைப் போற்றுவதன் கார ணத்தை அவர் கூறுகின்றார். சோழனுடைய புகழ் உலக முழுவ

தும் பரவி ஒளி செய்கின்றது. அவனது ஆளுகையின் உருளானது (ஆக்ஞா சக்கரம்) உலகத்தைச் சுற்றி வந்து எவர்க்கும் எந்தத் தீமையும் நேரிடாமல் காக்கின்றது. அதைப் போலவே ஞாயிறும் மேருமலையை வலம் வருகின்றதல்லவா! உலகத்தைக் காக்கும் உருளைகள் இரண்டையும் ஒரே இடத்தில் நிறுத்தி ஒப்பிட்டுக்காட்டி வாழ்த்தும் கூறுவது ஓர் தனி அழகுதான்!

" காவிரிநாடன் திகிரிபோல்
பொன்கோட்டு
மேரு வலம் திரிதலான் "

[திகிரி-ஆணைச்சக்கரம். பொன் கோட்டு-பொன்னிறமான உச்சியையுடைய]

சோழனின் வீரம் உலகமுழுவதும் பரவ நின்றதென்பதைப் படிக்கும் நாம் 'அந்தோ! இக்காலம்......!' என ஓர் பெருமூச்சுடன் கூறி, மேலே செல்லுகின்றோம்.

" மாமழை போற்றுதும்!
மாமழை போற்றுதும்!"

என்ற அடிகள் குளிர்ச்சியோடு வந்து காதுகளில் பாய்கின்றன. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்." "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றெல்லாம்பழங் கால மக்கள் போற்றிய உணவுக்குக் காரணம் மழையல்லவா! இம்மழை இல்லை என்றால் பச்சையான் புல்லின் நுனியையும் காணமுடியாதே. அதிலும் கைம்மாறு வேண்டாமல் நீர் பொழிவதல்லவா அது. இதற்கு வாழ்த்துக் கூறும் புலவருக்குத்தான் எவ்வளவு நன்றியுணர்ச்சி! என்று வியக்கின்றோம் நாம். ஆனால் புலவர் கூறிய வாழ்த்து இதனைக் கருதி மட்டுமன்று. இன்னும் ஓர் அருமையான காரணமும் உண்டு.

மழையானது சோழனுடைய இனிமையான அருளைப்போல வரையறையின்றி நீர் சுரந்து பொழிகின்றதாம். சோழன் அருளுக்கு ஒப்பான பொருள் வேறு எதுவும் இல்லை. மழையும் எல்லாவற்றிற்கும் மேலாய் நிற்கின்றது. உடையவர், இல்லாதவர் என்று இரண்டும் பார்ப்பதில்லை. ஆதலால்தான் மழை வாழ்த்தப் படுகின்றது.

" மாமழை போற்றுதும்!
மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு
அவன் அளிபோல்
மேல் நின்று
தான் சுரத்தலான்."

[நாமநீர்-அச்சம் தரும் கடல். வேலி-எல்லை. அளி அருள் (இரக்கம்) சுரத்தல் பொழிதல்]

இவ்வாழ்த்தின் மூலமாகச் சோழனது அருளின்பெருமையை அழகுற எடுத்துக் காட்டிய அருமை பாராட்டத்தக்கது.

இனிப் புலவரின் தாய் நாட்டுப் பற்று தலையெடுக்கின்றது; அதனையும் வாழ்த்துகின்றார்; பொருளோடுதான்.

" பூம்புகார் போற்றுதும்!
பூம்புகார் போற்றுதும்!

சோழனுடைய தலைநகர் காவிரிப் பூம்பட்டினம். அதை வாழ்த்துவதில் என்ன பொருள் செறிந்திருக்க முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதற்குள் புலவர் தொடங்கிவிடுகின்றார்; சோழருடைய மரபு தொன்று தொட்டுத் தோன்றி வந்ததல்லவா!

பரிமேலழகரால் "படைப்புக் காலந் தொட்டுவந்த பழங்குடி" எனப் பாராட்டப்பட்டது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி இதுதான். இக்குடியானது எக் காலத்தில் உண்டாயிற்று என்று வரலாற்று அறிஞர்களாலும் வரையறை செய்ய முடியவில்லை. இதைப் போன்றே புகார் நகரம் தோன்றிய காலத்தையும் புகன்றவர்கள் இல்லை. சோழர் குடி தோன்றிய போதே தோன்றியபெருமை அதற்கு உண்டு. அது மட்டுமல்ல. சோழர் குடி எவ்வாறு மேலும் மேலும் ஓங்கிப் புகழடைந்து விளங்குகின்றதோ அதைப் போலவே இந்த நகரமும் புகழ் ஓங்கிப் பரவி நிற்கின்றதாம். ஆதலால் தான் ஒத்த இரு பொருள்களை உவமையோடு வாழ்த்துகின்றார் அவர். இவ்வடிகளைப் பாடும்போதே வரலாற்றின் எல்லையும் செல்ல இயலாத ஓர் காலத்திற்குச் சென்று திரும்பி வருகின்றோம் நாம்.

"வீங்கும்நீர் வேலி உலகிற்கு
அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்"

[வீங்கும்-பொங்குகின்ற. பரந்து ஒழுகல்-பலராலும் புகழ்ப்பட்டு பரவி நிற்றல்]

இவ்வளவு சிறப்பாகச் சோழரின் குடியைச் சேரர் குடியில் பிறந்தவர்—அதிலும் முடிசூடா மன்னர் புகழும் போது எவ்வளவு மகிழ்ச்சியும் வியப்பும் மலர்கின்றன! திங்கள் வாழ்க! செங்கதிர் வாழ்க! மங்குல் வாழ்க!

வண்புகார் வாழ்க! என நம்மையறியாது வாழ்த்துகின்றோம் நாம். வாழியர் இளங்கோ!

"திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்!
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடை போன்றிவ்
அங்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்!
வீங்கு நீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்."

★

புது வெள்ளம்

-இராதாமணாளன்-



நான் சிறு பெண்ணாயிருக்கும் பொழுதே, அத்தான் எங்கள் வீட்டிற்கு வந்தால் எனக்கு ஒரே ஆனந்தம்! சென்னையிலிருந்து வரும் பொழுது எனக்குப் பிடித்தமான பொருள்களை வாங்கிக் கொண்டு வருவார்.

அவர் வந்து உட்கார்ந்ததும், அக்காள் புன்னகை நிறைந்த முகத்துடனே தண்ணீர் கொண்டுவந்து தருவாள்! அக்காவைப் பார்த்துக் கொண்டே, 'கனகம்' என்று என்னை அழைப்பார். கைகளில் வாங்கிவந்தவைகளைக் கொடுத்து விட்டு, என் கன்னத்தைக் கிள்ளுவார்! நான் சிரித்துக்கொண்டே ஓடிவிடுவேன். இதுவழக்கமாக நடக்கும்.

ஆண்டுகள் சில சென்றன. நான் அவிழ்ந்த மலரானேன். தோட்டக்காரன் வேலையை என் பெற்றோர் செய்யத் தொடங்கினர்!

பூஞ்சோலையில் நீர் வார்த்துச் செடிகளை வளர்த்து, அரும்புகள் மலர்வது கண்டு தோட்டக்காரன் பூரிப்பான். பூக்களைப் பிறர் திருட்டுத்தனமாகப் பறித்துக்கொண்டு போய் விடாமல், காவலுமிருப்பான். ஆனால் யாராவது வந்து விலைக்குக் கேட்டால் பறித்துத்தந்து விடுவான். பறித்துத் தரக்கூடாது. பூத்தமலர் செடியிலேயே வாடவேண்டுமென்று நான் கூறவில்லை.

நீர்பாய்ச்சி, காவல்காத்து, பூத்ததல்லவா இம்மலர். பிணத்தின் மேல் போடவா அல்லது மணப்பெண்ணின் கூந்தலிலே சூடவா இதனைக் கேட்கிறார்கள் என்றாவது யோசித்துப் பார்த்துத் தரக்கூடாதா?

பூவையரின் வாழ்க்கைக்கும் பூக்களின் வாழ்க்கைக்கும் வேறுபாடே கிடையாது!

பிணத்தின் மேல் வீசப்படுவோமா அல்லது அணங்கின் கூந்தலில் அமர்ந்து அழகையும், மணத்தையும் வீசுவோமா என்பது செடியில் பூத்துக் குலுங்கும் மலருக்குத் தெரியாது! அதேபோல, மணக்கப் போகிறவன் கற்றவனா, கல்லாதவனா; அழகானவனா, அகோரமானவனா; இளகிய நெஞ்சத்தவனா, இரும்பு இதயத்தவனா என்ற விவரங்களை வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் மணமாகாத மங்கைகள் அறிய முடிவதில்லை. நானும்தான் அறியேன், ஒரு நோயாளி என் கணவனாக வருவான் என்ற உண்மையை!

"கனகம்! மணமாவதற்கு முன்பு அவரை நீ பார்த்தது கூட கிடை

யாதா ?" 'என்று வசந்தா குறுக்கே கேட்டாள். அவள் முகத்தில் ஆச்சரியம் தோன்றியது. காதல் மணம் செய்துகொண்டவளுக்குக் கணவனை ஒரு முறைகூட பார்க்காமலேயே மணந்துகொண்ட ஒரு பெண்ணைப் பார்த்தால் வியப்பாகத் தானிருக்கும் !'

பார்த்ததே கிடையாது வசந்தா !

" சரி! அவரை நீ மணந்தாய்! அவரும் ஓர் ஆண்டிற்குள் இறந்தார்! நீ விதவையானாய் ! இதுவரைக்கும் எனக்கு நன்றாகத் தெரியும்! பிறகு ?......"

'நீ விதவையானாய் ! என்ற சொற்களுக்குப்பின் அவள் என்னென்ன பேசினாள் என்பதே என் காதில் விழவில்லை 'விதவை' என்ற அச் சொல் என் இதயத்தை முள் கொண்டு குத்தியது !'

விதவை நானா? இல்லை? என் கழுத்து வேண்டுமானால் தாலியை இழந்த காரணத்தால் விதவையாகியிருக்கலாம் ! கூந்தல் மலரையும், நெற்றி குங்குமத்தையும் பறிகொடுத்ததினால் அவைகள் விதவையாகியிருக்கலாம்! ஆனால் என் இளமை விதவையாக வில்லையே ! என் நரம்புகளில் <u>நர்த்தனம்</u> செய்த உணர்ச்சி விதவையாக வில்லையே !

என் இளமையையும், உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சியையும், உடலின் துடிதுடிப்பையும் சமுதாயம் 'விதவை' என்ற சாட்டையினால் அடித்து அடக்கப் பார்த்தது !

கொழுந்து விட்டெரியும் கதிரவனை, நீர்ஊற்றி அனைத்துக் குளிர்ச்சியாக்க மக்களால் முடியுமானால், விதவையின் உள்ளத்தில் ஊற்றெடுத்து ஓடிவரும் உணர்ச்சி வெள்ளத்தையும் அணைகட்டித் தடுக்க முடியும் ! என்வாழ்க்கையோ புயலில் சிக்கிய படகாயிற்று. 'இதற்குமேல் பேச முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக் குள்ளேயே சிக்கிக் கொண்டன ! என் கண்கள் குளமாயின.

" அழாதே கனகம்! கவிழ்ந்த படகு அல்லவே உன் வாழ்க்கை ? கரை சேர்ந்த படகுதானே ! சென்றதை எண்ணிக் கண்ணீர் விடுவதில் அர்த்தமே கிடையாது !" என்று தேற்றி என் கண்ணீரைத் துடைத்தாள் வசந்தா !'

இந்த மனநிலையில் நான் தவித்துக்கொண்டிருக்கும்பொழுது, நாட்கள் நகர்ந்த வண்ணமிருந்தன.

ஒருநாள் அத்தானிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. " சிவகாமி பிரசவிக்கும் மாதம் இது. ஆகையால் உடனே அவளுக்குத் துணையாயிருக்க கனகத்தை அனுப்பி வைக்கவும் " என்று எழுதியிருந்தது அக் கடிதத்தில்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. பழையநினைவுகள் தோன்றித்தோன்றி மறைந்தன என் மனதில்.

நான் விதவையான பிறகு ஒரு முறை அத்தான் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார் தனியாக வீட்டில் அவரிருக்கும் பொழுது வெளியே நான் தலை காட்டுவதே கிடையாது.

ஒருநாள் அம்மாவும் அப்பாவும் ஏதோ வேலையாக அடுத்த தெருவுக்ுச் சென்று விட்டனர். அவரும் நானும் தான் வீட்டில் தனியாக இருந்தோம். சமையல் அறையில் நான் இருக்கும்பொழுது அத்தான் அப்பக்கம் மொதுவாக வருவது போல் இருந்தது தனியாக யிருக்கும் என்னிடம் வருகிறார் அத்தான் என்பதை அறிந்ததும் என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"தண்ணீர்! கனகம்!" என்று ஏதோ ஒருவித குரலில் கேட்டார். நாணத்தோடு தண்ணீர் மொண்டு கொடுத்தேன்.

"தண்ணீர் நன்றாயில்லையே!" என்றார். "குளத்து தண்ணீர்தான் அத்தான்!" என்று குனிந்த படியே கூறினேன்.

"வளையல்சப்தம் செய்யாத கைகள் தித்திக்கும் தேன் தந்தாலும் கசப்பாகத் தானிருக்கும், கனகம்!" என்றார் சிரித்துக் கொண்டே. இப்படி அவர் கூறியதும், என் கன்னங்களில் யாரோ முரட்டுக் கையினால் ஓங்கி அறைந்தது போன்ற உணர்ச்சியும், வேதனையும் உண்டாயிற்று.

"நல்லவரல்லவா அத்தான்? ஏன் என் மனம் புண்படும்படிப் பேசுகிறார்?" என்றெண்ணினேன். ஏறிட்டு அவர் முகத்தைப் பார்த்தேன். குறும்பின் சாயல் அவர் முகத்தில் தோன்றவில்லை. ஏதோ திடமான நம்பிக்கையினால்தான் அப்படிக் கூறினார் என்று அவரது கலக்கமற்ற முகத்திலிருந்து தெரிந்து கொண்டேன்.

அத்தானின் உதடுகள் அசைய ஆரம்பித்தன, என் விழிகள் தரையைப் பார்த்தவண்ணமிருந்தன.

"வளையலை உடைத்து விட்டார்களே என்பதை எண்ணி ஏன் வருந்த வேண்டும்? கனகம் நான் போடுகிறேன் வளையல்!" அவ்வளவுதான் அவர் கூறினார். அந்த வார்த்தைகளில் தான் எவ்வளவு உட்பொருள்? அவைகளைக் கேட்டவுடனே நான் திகைத்தேன். அவைகளின் பொருளை உணரக்கூட முடியவில்லை அப்பொழுது.

இந்தப் பழைய நிகழ்ச்சியும் இவ்வார்த்தைகளும் இரவெல்லாம் என் இதயத்தில் வலம் வந்து கொண்டேயிருந்தன.

மறுநாள் சென்னை வந்து சேர்ந்தேன். அத்தானும், அக்காளும் என்னை அன்போடு வரவேற்றார்கள். நாட்கள் செல்லச் செல்ல அக்காளுக்கு அங்கும் இங்கும் நகர்வதும் கடினமாயிற்று. வீட்டு வேலைகளையெல்லாம் நானே செய்து வந்தேன். ஒவ்வொரு நாளும் மாலையில் அவருக்குக் காப்பி தரும்பொழுது எவ்வளவு வெட்கமும் மகிழ்ச்சியும் அடைவேன் தெரியுமா?

பத்தாம் மாதக் கடைசியாகையால் அக்காவை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டார். நானும் அவரும் தான் வீட்டிலிருந்தோம். தனியாக இருக்கிறோமே என்ற உணர்ச்சிகூட எனக்குத் தோன்றியது, ஆனால் வேறென்ன செய்யமுடியும்?

ஒரு நாள் இரவு. அத்தானும் தூங்கப் போய்விட்டார். ஆனால் எனக்கோ தூக்கம் வரவில்லை அந்த நிலையில்-அத்தானும் தூங்கப்போனவர் தூங்கவில்லை என்பது அப்புறந்தான் தெரிந்தது!

"என்னடி நடந்தது? சொல்லு கனகம்" என்று ஆவலோடு கேட்டாள் வசந்தா. வசந்தா பெண்தான் ஆனாலும் அவளிடம் அதனை எப்படிக் கூறுவது?'

வசந்தா! மறுநாள் அத்தானின் முகத்தைப் பார்க்கவே வெட்கமாகயிருந்ததடி எனக்கு! அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் அத்தான் ஆஸ்பத்திரி போன நேரந்தவிர மீதி நேரத்தை வீட்டிலேயே கழித்தார்.

நான் கட்டிலில் படுத்துக் கொண்டு கூரையைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்! என் கைகளைத் தலையின் கீழ் வைத்தபடி மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தேன். என் உள்ளத்தில் ஒரு வித இன்பம்

சுரந்து கொண்டே யிருந்தது. அறையினுள் அத்தான் வருவது எனக்குத் தெரிந்தது என்றாலும், கவனிக்காதவளைப் போல அப்படியே படுத்துக் கொண்டிருந்தேன். கட்டிலிலா என் உடல் இருந்தது? அல்ல, அல்ல. காற்றிலே மிதந்து கொண்டிருந்தது!

அத்தான் அருகில் வந்து நின்றார்! நான் எழுந்திருக்க முயற்சித்தேன் "வேண்டாம் கனகம்! படுத்திரு!" என்று கூறி. புது வெள்ளத்தை என் மீது போட்டு விட்டு, வெளியே சென்றார். புதுவெள்ளம் அத்தானிடமிருப்பது எனக்குத் தெரியும்! வேண்டு மென்று கூட ஒரு முறை கேட்டேன்; அவர் முடியாதென்று மறுத்து விட்டார். தானாகவே புது வெள்ளத்தைத் தந்தாரென்றால் நான் ஆனந்த வெள்ளத்தில் மிதந்ததில் அதிசய மென்ன வசந்தா இருக்கிறது?

"புது வெள்ளத்தை உன் மேல் போட்டாரா?"

ஆமாம் வசந்தா!

"புது வெள்ளத்தை எப்படி கனகம் போடுவது?"

'அவள் சந்தேகம் எனக்குப் புரிந்து விட்டது! கலகல வென்று சிரித்தேன்! அவள் விழித்தாள்!'

வசந்தா?

"சொல்லு கனகம்!'

வசந்தா! என் அத்தான் எழுதிய புத்தகம் 'புது வெள்ளம்' என்பது! என் வசந்தா இப்பொழுது சிரிக்கிறாய்?

ஆவலோடு நான் அப்புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

அவசரமாக அத்தான் அறையினுள் ஓடி வந்தார். அவர் முகத்தில் ஏக்கம் தோய்ந்திருந்தது. அவர் உடல் துடி துடித்தது.

"என்ன அத்தான்?" என்று வேகமாகக் கேட்டேன்.

"ஆஸ்பத்திரியிலிருந்து ஆள் வந்திருக்கிறான்" என்று கூறியதும் அவர் கண்கள் நீரைச் சிந்தின! எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"சொல்லுங்கள் அத்தான்!" என்று கெஞ்சினேன். என் கண்களும் கலங்கின அக்காளுக்கு என்னவோ என்ற அச்சந்தான்.

"சிவகாமிக்கு ஜன்னி பிறந்து விட்டதாம்!" என்றார்! அதைக் கூறும்போதே அவர் குரல் தழுதழுத்தது. கேட்ட எனக்கும் ஒன்றும புரியவில்லை.

ஆஸ்பத்திரிக்குச் சென்றோம்! வளர்த்துவானேன் என் அக்காளை இறப்பு என்ற கொடியவன் அணைத்துக் கொண்டான்!

வீடு சோக நிலையமாயிற்று. அத்தானுக்குச் சமைத்துப்போட என்னை இங்கேயே விட்டுச்சென்றாள் என் அன்னை.

என்ன வசந்தா! சந்தேகம் வந்தவளைப்போல காண்கிறாய்?

"இல்லை! இளம்பெண்ணைத் தனியாக விட்டுச்செல்ல உன் அம்மா எப்படிச் சம்மதித்தாள்?"

அத்தான், என் அம்மாவின் கடைசி தம்பி. தம்பியின் மேலிருந்த அன்பின் காரணமாகத்தான் விட்டுச் சென்றாள்!

மாதங்கள் சென்றுகொண்டே இருந்தன. அதற்குள் பலமுறை நான் "புது வெள்ளம்" என்ற அப் புத்தகத்தைப் படித்துவிட்டேன்.

"சமுதாயமென்ற ஏரியில், பகுத்தறிவு என்ற புதுவெள்ளம் ஓடிவர முடியாமல் வஞ்சகர், அணை கட்டி விட்டனர். ஆகையால் ஏரியில்

இருக்கும் நீர் கெட்டுவிட்டது. பாசியும், துர்நாற்றமும் அதிகமாகி விட்டன! விஷப் பூச்சிகள் நீந்திக்கொண்டிருக்கின்றன ! நீரின் நிறம்கூட மாறிவிட்டது! பச்சையாகப் பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது... ...ஆராய்ச்சியென்ற மழை பெய்து, பகுத்தறிவு என்ற புதுவெள்ளம், மூடக் கொள்கைகள் என்ற அணைக் கட்டுகளை உடைத்துக்கொண்டு, கரை புரண்டோடி வந்தால்தான், ஏரி நீர் முழுவதும் தூய்மையடையும்''......புதுவெள்ளம் தாராளமாக நாடு முழுவதும் பாயவேண்டும்!''

அந்நூலில் இந்த இடத்தை முதல் முறையாகப் படிக்கும்பொழுதே எனக்கு ஒரு விதமான உணர்ச்சி ஏற்பட்டது. இதனைப் பலமுறை வாசித்தேன். என் உள்ளத்தில் புதுவெள்ளம் பாய்ந்தது ! கருத்துப் பொதிந்த இவ்வார்த்தைகள் என் இதயக் கவிதையாயிற்று ! புதுவெள்ளம் பாய்ந்ததால் புத்தம்புதிய ஆசைகள் என் உள்ளத்தில் சுரக்க ஆரம்பித்தன.

விடுதலை பெற்ற கிளியானேன் ; என் இதயத்தில் புரட்சியென்ற புதுவெள்ளம் பாய்ந்ததால்!

என் வாழ்க்கையென்ற செடி வளராமல், வெயிலிலே காய்ந்து கருகிவிட வேண்டுமென்பது சமுதாயத்தின் சட்டம்! அச்சட்டத்தை மனவலியால் எட்டி உதைத்து சுக்கல் சுக்கலாகச் சிதறியோடச் செய்தேன்!

என் நெஞ்சமென்ற குதிரை' பச்சை நிலத்தில் தன் இச்சைப்படி ஓடி மேயாதபடி, அதன் கால்களைப் பழைய வழக்கம் என்ற பழைய கயிற்றால்தான் கட்டியிருந்தார்கள். பழைய கயிறுதானே, உள்ளத்திலே உரம் ஏறி கால்லுக்கு வலிவேற்பட்டு குதிரை கிளம்பியதும் தானகவே அறுந்துவிட்டது!

ஒருநாள் மாலே, மல்லிகை மாலேயோடு என் அத்தான் வந்தார்.

“மாலே எதற்கு அத்தான்?'' என்றேன். ஒன்றும் பதில் கூறாமல் கெம்பீரமாகவே என் அருகில் வந்தார்.

“கனகம் ! என் கண்ணே ! புதுவெள்ளத்தில் நீந்தி பழகித் தேறிய உனக்குப் புதுவாழ்வு அளிக்கப் போகிறேன்!'' என்று கூறி, அம் மாலேயை என் கழுத்தில் அணிவித்தார்.

மாலே என் கழுத்தில் விழுந்ததும் பாலேவனமான என் வாழ்க்கை, பசும்பயிர் விளேந்த நன்செய் நிலமாயிற்று! கனல் கக்கும் காற்றுக்குப் பிறகு தென்றல் வீசியது போன்றிருந்தது என் நிலேமை.

“உன் இதழ்களில் ஊறும் மதுவை ‘உரிமையோடு' இனி நான் பருகலாம் அல்லவா ?'' என்று உணர்ச்சியோடு கேட்டார்.

ஆனந்தத்தின் அணைப்பைச் சுவைக்க வேண்டுமென்ற என் நரம்புகளின் துடிதுடிப்பை என்னல் தாளமுடியவில்லே! அவரது அன்பழைப்பை ஏற்றுக்கொண்டேன்!

அவரோ அன்புள்ளங்கொண்டு, இன்ப உலகைக் காட்டி, புதுவாழ்வு அளித்தார். இருவருமே புதுவெள்ளத்தில் மிதந்தோம்.

“புரட்சிப் பெண்ணடி நீ !'' ‘என்று சொல்லிக்கொண்டே என் கன்னத்தைக் கிள்ளினுள் வசந்தா ! அவள் கை மலர் போன்றதுதான் என்றாலும் கொஞ்சம் வலித்தது போல் இருந்தது. இதுவே அத்தான் கிள்ளி இருந்தால் .....'

உலக் கழல்

(வள்ளல்)

ஆள ஓர் நாடு—ஆளப்பட வேறோர் நாடு, ஆட்சி செலுத்த ஓர் கூட்டம்—அடங்கி வாழ வேறோர் கூட்டம், சுரண்ட ஓர் வர்க்கம்—சுரண்டப்பட வேறோர் வர்க்கம், உழைக்க ஓர் குழு—உறிஞ்ச வேறோர் குழு, பாடுபட ஓர் இனம்—பயன் துய்க்க வேறோர் இனம்—என்ற நிலைமை இருக்கக் கூடாது—இருத்தலாகாது என்ற முழக்கங்கள் உலகெங்கணும் எழுகின்றன. 'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு' என்ற சங்கநாதம் எங்கும் ஒலிக்கின்றது. எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற விடுதலை கீதத்தை உழைப்பாளர் முதல் ஊராள்வோர் ஈறாக எழுப்புகின்றனர்.

பன்னெடுங் காலமாக அடிமைப் படுத்தப்பட்டு அல்லலுறும் மக்கள்—கொடுமைக் குள்ளாக்கப்பட்டு உழலும் மக்கள்—விலங்கு பூட்டப்பட்டு வேதனைக்குள்ளான மக்கள், அடிமைத் தளையை அறுக்க—கொடுமையைக் களைய—விலங்கை உடைக்க எண்ணுவதும், விரும்புவதும் வீறு கொண்டெழுவதும் இயற்கை. இவ்வெண்ணமும், விருப்பமும், எழுச்சியும், காலம், சூழ்நிலை, இடம் ஆகியவற்றை யொட்டி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்தில் சிலபல காரணங்களை அடிப்படை யாகக் கொண்டு எழும்.

இவ்வெண்ணம் உண்டாகக் கூடாது, எழுச்சி கூடவே கூடாது என்று ஊராள்வோரும் நாடாள்வோரும் நினைப்பர். நினைப்பது மாத்திரமன்றி இவற்றிற்குக் காரணமாயிருப்பவர்களைக் கடுந்துன்பத்திற்குட்படுத்தவும் செய்வர். வாய்ப்பூட்டு, சிறைக்காவல், சித்திரவதை, கொலை இன்னோரன்ன பல தண்டனைகளுக்கும் அவர்களை ஆளாக்குவர்.

உரிமை வேட்கையை மக்களிடையே யுண்டாக்கிய எத்தனையோ அறிஞர்கள் ஆட்சியாளர்களின் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். மதவாதிகளின் சதி செயலினால் மாய்க்கப்பட்ட மதிவாணர்கள் எண்ணில் அடங்கார். என்றபோதிலும் அவர்களின் எண்ணம் என்றேனும் ஓர் நாள்—சிலபல ஆண்டுகளில் ஈடேறித் தான் தீரும். இவ்வுண்மையை உலக வரலாறு, குறிப்பாக ரஷிய நாட்டு வரலாறு தெற்றெனப் புலப்படுத்தும்.

நடவாது என்று நம்பப்படுவதை நடத்திக் காட்டும் ஆற்றல், உரிமை வேட்கைக்கு உண்டு.

பகலவன் மறையா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்' என்று பறைசாற்றப்பட்ட காலம் மலை ஏறிவிட்டது. இப்போது கலகலத்த ஏகாதிபத்தியம் என்று கருதும்படியான காலம் வந்துவிட்டது, 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாள் இந்தியத் துணைக்கண்டத்திற்குக் 'குடியேற்ற நாட்டு உரிமை' என்ற பெயருடன் விடுதலை கிடைத்துவிட்டது. 'பாக்கிஸ்தான் பகற்கனவு' என்று ஏளனம் பேசியவர்கள் பாகிஸ்தான் தனி நாடாக இயங்குவதைக் கண்டு பெருமூச்சு விடுகின்றனர். பத்து நாட்களுக்கு முன்னர் பர்மா பிரிட்டிஷ் பிடியினின்றும் முற்றிலும் விடுபட்டு சுய நிர்ணய சுதந்திரக் குடியரசு நாடாக ஆகிவிட்டது. இலங்கையும் பிரிட்டிஷ் பிடியினின்றும் முற்றிலும் விடுபட ஆவன செய்துவருகின்றது.

இந்தியா குடியேற்றநாட்டு அந்தஸ்து பெற்றதற்குக் காரணம் இந்திய மக்கள் செய்த கிளர்ச்சிதானா அல்லது உலக மன்றத்திலே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்பட்டது தானா என்பதைப்பற்றி நாம் விவாதம் நடத்தத் தேவையில்லை ஏதோ காரணத்தால் எந்தச்சூழ்நிலையாலோ வெள்ளையர் ஆட்சிப் பொறுப்பை இந்தியத் துணைக் கண்டத்தினரிடமே ஒப்புவித்துவிட்டனர்.

'இந்தியா பெற்ற குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான், பெருமை படத்தக்கதன்று' என்று கருதுவோரும், உரிமை பெற்றுவிட்டது. பெற்றது விடுதலையே என்று விளக்கந் தருவோரும் உளர். விரும்பியிருந்தால் இந்தியா பர்மாவைப் போல் சுயநிர்ணய சுதந்திரக் குடியரசு நாடாக ஆகியிருக்கமுடியும். ஏதோ காரணத்தால் இப்போது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் 'குடியேற்றநாட்டு அந்தஸ்து' என்ற பெயரோடு திருப்தியடைந்து விட்டனர். இந்தியாவில் ஏற்பட்டுள்ள உள் நாட்டுக் கலகத்தை அடக்கத் திறமை இல்லை என்ற காரணத்தாலோ, அல்லது வேறு அரசியல் தந்திரத்தாலோ' வெள்ளையரான 'மௌண்ட் பேட்டனை' இன்னும் கவர்னர் ஜனரலாக வைத்துக் கொண்டுள்ளனர் மற்றப்படி பாகிஸ்தானில் ஜனாப்ஜின்னா கவர்னர் ஜனரலாக இருப்பது போன்று இந்திய டொமினியனிலும் பண்டித நேருவோ அல்லது வேறு தகுதியுடையவரோ கவர்னர் ஜனரலாக ஆகியிருக்கலாம்.

இந்தியா குடியேற்றநாட்டு அந்தஸ்து பெற்ற நாடாக ஆனாலும் முழுச் சுதந்திரமுடைய மற்ற நாடுகளுக்கு உள்ள பலவித உரிமைகளும் இந்தியாவுக்கு உண்டு. மற்ற சுதந்திர நாடுகளைப் போன்று இந்தியாவும் தன் தூதுவர்களை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பிவருகின்றது. எந்த நாட்டவரையும் அழைக்கலாம். எந்த நாட்டோடும் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். ஆனால், இந்த உரிமைகளோடுகூட, பிரிட்டிஷ் பொதுநலக் கழகத்தில் தானும் ஓர் உறுப்பாக அமைந்துள்ளது. இந்த நிலையை நீடிக்கவும் அவசியமானால் விலகிக்கொள்ளவும், இந்த 'இந்தியநாடு' உரிமை பெற்றிருக்கிறது.

இன்று 'பர்மா' அடைந்துள்ள நிலையை, இந்தியா அடைவது அதன் விருப்பத்தை, ஆட்சிக் குழுவினரின் ஆசையைப் பொறுத்திருக்கிறது. 'இந்தியா, விடுதலை அடைந்துள்

ளது, என்றாலும், இன்னும் விடுதலை பெற்றதன் 'பயனை' நுகரவில்லை.

ஆனால் மக்கள் விழித்து விட்டார்கள். இனி அவர்களுடைய உணர்ச்சிகளை அடக்கமுடியாது என்பதை ஆட்சியாளர் நினைவிலிருத்தி ஆவன செய்யவேண்டும். அப்பொழுதுதான் இந்த நாடு, ஆகஸ்டு பதினைந்திலே அடைந்த மாற்றம் பயனுடையதாகும்.

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு நலிவுற்று அடிமைகளாக வாழும் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் அடிமைத் தளையை அறுக்க ஆர்த்தெழுந்து அறப்போர் புரிவதைக் காண்கிறோம். இந்தோநேஷியா மக்கள் இனவுணர்ச்சி பெற்று. விடுதலை வேட்கையுடன் கிளர்த்தெழுந்து, தனி அரசாங்கம் அமைத்து டச்சு ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்தை எதிர்த்து மறப்போர் புரிவதைப் பார்க்கிறோம். பாலஸ்தீனத்தில் வந்து குடியேறிய யூதர்களின் ஆதிக்கத்தை அழிக்க அரேபியர்கள் அல்லும் எல்லும் அயராது போர்புரிவதைக் கேட்கிறோம். கிரேக்க கொரில்லா அரசாங்கத்திற்கும் எதென்ஸ் அரசாங்கத்திற்கும் சண்டை மூண்டுள்ளது

சீனாவில் கம்யூனிஸ்ட்கள் தனி அரசாங்கம் அமைத்து. முதலாளி வர்க்கத்தின் தலைவராய் விளங்கும் ஷியாங்காய் ஷேக்கின் அரசாங்கத்தை—முதலாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தை, எதிர்த்துக் கடும் போர் புரிகின்றனர். பிரஞ்சு நாட்டில் கம்யூனிஸ்ட்களுக்கும் சோஷலிஸ்ட்களுக்கும் இடையே தகராறு தலைவிரித்தாடுகிறது.

ருமேனியா நாட்டு மன்னர் ஆட்சிப் பொறுப்பை மக்களிடம் ஒப்புவித்துவிட்டு ஊர்சுற்றி வருகிறார். இத்தாலிய மன்னர் போர்முடிவுற்ற அடுத்த ஆண்டே நாடு கடத்தப்பட்டார்.

இந்தியாவிலே சமஸ்தானாதிபதிகளின் எதேச்சாதிகாரம் மண்ணைக் கௌவிக்கொண்டது. ஒன்றிரண்டு சமஸ்தானங்களைத் தவிர ஏனைய எல்லாச் சமஸ்தானங்களிலும் பொறுப்பாட்சி பூத்துவிட்டது. அவற்றிலும்கூட இன்னும் சில நாட்களில் பொறுப்பாட்சி ஏற்பட்டே தீரும். காரணம் இருபதாம் நூற்றாண்டில் மன்னர்கள் முடிதுறக்கும் படலம் விரிவடைந்துகொண்டே போகின்றது என்பதுதான்.

உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் உள்நாட்டுப் போர், இனப் போர், வர்க்கப் போர், கட்சிப் போர், குழப்பம். கலவரம், மன்னர் முடி துறத்தல், பொறுப்பாட்சி அடைதல் இன்னோரன்ன பலவும் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? உரிமை வேட்கைதான்! தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்ற விருப்பம் கொள்வதுதான்! ஒடுக்கப்பட்ட இனம் உயர்வடையவேண்டும். என்று விழைவதுதான். நலிவுற்ற மாந்தர் வலிவுபெற வேண்டுமென்று வீறு கொண்டெழுதல்தான். நசுக்கப்பட்ட கூட்டத்தினர் நலம்பெற நினைப்பதுதான். அடிமைப்பட்ட மக்கள் விழிப்புற்றெழுந்து விடுதலை ஆர்வங் கொள்வதுதான். அப்படிப் பட்ட ஆர்வத்தில் பூப்பதுதான் தன்னாட்சி !

Edited and Published by K. Anbazhagan M. A., at 10, Vellala St., Purasapakkam, Madras-7
Printed by K. V. T. Srinivasan at Sree Ranga Press, 1, Raja Hanumanthalala St., Madras-5

"புதுவாழ்வு"

(திங்கள் வெளியீடு)

★

விலை விவரம் :

		உள் நாடு இந்தியா, இலங்கை.	வெளிநாடு பர்மா, மலேயா
தனி இதழ்	....	அணா 4	அணா 5
,,	....	சதம் 30	காசு 24
ஆண்டுக் கட்டணம்	....	ரூபா 3	ரூபா 4

விளம்பர விகிதம் :

அட்டை, வெளிப் பக்கம்	....	ரூ.	120
,, உள் பக்கம்	....	,,	80
உள் பகுதி, முழுப் பக்கம்	....	,,	60
,, அரைப் பக்கம்	....	,,	30
,, கால் பக்கம்	....	,,	20

மற்ற விவரங்கட்கு :—

நிர்வாகி,

புதுவாழ்வு,

10, வேளாளர் தெரு,

புரசைபாக்கம் :: சென்னை-7.

ஏ. எம். சுப்பிரமணியன

Wrapper printed at the Oriental Printing Works, Madras.